விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 29 ரபீஉல் 12 இதழ் 277

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15 11 1986

## கிளிநொச்சியில் 150 பயணக் கைதிகளுடன் இராணுவம் ரோந்து

(நமது நிருபர்)

கிளிநொச்சி இராணுவமுகாமிலிருந்து 150 பொதுமக்கள் சகிதம் இராணுவத்தினர் நேற்று ரோந்து சென்றனர் நேற்றுக்காலை 9 மணியளவில் சுமார் 200க்குமேற்பட்ட இராணுவத்தினர்புறப்பட்டுகணேசபுரம் வீதிவழியாக வந்தனர்

அப்பகுதியில் விவசாயவேலைகளில் ஈடுபட்டிருந்த ஆண்கள் பெண்கள் உட்பட 150 பேரை பணயக் கைதிகளாகவைத்துக் கொண்டு விடுதலைப்புலிகளால் தடைபோடப்பட்டிருந்த பகுதியை அண்மித்தனர்.

அங்கு தடையாகப்போடப்பட்டிருந்த வாகனங்களுக்குள் கிரனேட்டுக்களை வைத்துவிட்டு மீண்டும் தமது முகாம் நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தனர்.

அச் சமயத்தில் அவ் வீதியால் வந்துகொண்டிருந்த ந மகேந்திரன் என்பவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததால் அவர் பலியானார்.

இராணுவத்தினர் பணயக் கைதிகளைக் கைது செய்த 150 பேரில் 15 பேரை வைத்துக்கொண்டு மிகுதிப்பேரை விடுதலை செய்தனர்.

பணயக் கைதிகளுடன் இராணுவத்தினர் ரோந்து சென்றதால் தமது போராளிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ள முடியாமல் இருந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (மா)

## லண்டனில் குண்டுவீச்சுசம்பவத்தில் 3 தமிழர்பலி 6பேர்காயம்

### அரசியல் குரோதமே காரணம்!

லண்டன், நவ.14

**லண்டன் கிழக்கு வட்டாரத்தில் இடம் பெற்ற குண்டு வீச்சுச் சம்பவமொன்றில் 3 இலங்கைத் தமிழர்கள் ஸ்தலத்திலேயே பலியானர்கள், ஆறுபேர் படுகாயமடைந்தனர்.**

சம்பவதினமிரவு அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாகவும், ஜன்னலினூடாக குண்டு வீசப்பட்டதாகவும் அறியப்படுகிறது. அவ்வேளையே யன்ன குறித்தஇந்த ஒன்பதுபேரும் ஒரு வீட்டில் தங்கியிருந்தனர். இச்சம்பவத்தில் தீக்காயமடைந்த ஆறுபேரும் உடனடியாக மருத்துவமனைக்கு

(11ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி இன்று பெங்களூர் பயணம்

கொழும்பு, வெள்ளி

ஜனாதிபதி திரு ஜெயவர்த்தன நாளை ஆரம்பமாகும் சார்க்மாநாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்று காலை பெங்களூர் பயணமாகிறார்.

16ம்,17 திகதி நடைபெறும் இம்மகாநாட்டிற்கு செல்லும் இலங்கை ஜனாதிபதி இன்று இந்தியப் பிரதமர்திரு. ராஜீவ்

(11ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலையடுத்து படையினர்முகாம்திரும்பினர்

(நமது நிருபர்)

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நகர்ந்து சென்ற இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைபுலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டதால், இராணுவத்தினர் மீண்டும் முகாநோக்கி திரும்பிச் சென்றனர்.

நேற்றுப்பிற்பகல் 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பருத்தித்துறை இராணுவ

(11ம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் ஏற்பாட்டுடன் இன்று எதிர்ப்புத்தினம்

யாழ்ப்பாணம், சனி

மலையகப்பாட்டாளித் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட நினைவுதினம் இன்றாகும் 1948ஆம் ஆண்டு நவம்பர் 15ந் திகதி இலங்கை அரசியலில் இச் சம்பவம் இடம் பெற்றது.

இதனையொட்டி ஈரோஸ்

(11ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஊர்வலங்களும் ஹர்த்தாலும்

ஒட்டுசுட்டான், வெள்ளி

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் கைதாசியதை ஆட்சேபித்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கிராமங்கள்தோறும் ஹர்த்தாலும் ஊர்வலங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன,

இதுவரை முல்லைத்தீவு தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய இடங்களில் நடைபெற்ற ஊர்வலம் தொடர்ச்சியாக புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் இன்று நடைபெறுகின்றது.

இதேவேளை பின்வரும் வாசகங்களடங்கிய சுவரொட்டிகள் பரவலாக எல்லா இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன,

இந்திய அரசே தமிழீழத்தின் விடுதலைத் தலைவன் பிரபாகரனை விடுதலை செய்!

இந்திய அரசே எமது முடிந்த முடிவு தமிழீழமே, உனது ஏகாதிபத்தியவெறிக்கு நாம் பலியாக மாட்டோம்!

-பொதுமக்கள்-

(11 ம் பக்கம் பார்க்க)

## 'அராஜகத்தின் ஆணிவேரை அறுப்போம்' - யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழு

நல்லூர், நிருபர்

யாழ். பல்கலைக்கழக வணிகவியல்துறை மூன்றும் வருட மாணவன் அ. விஜிதரன் கடத்தப்பட்டது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு அராஜகத்தின் ஆணிவேரை அறுப்போம்'' என்ற துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளனர். இதில் தெரிவிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு!

★ தமிழ்பேசும் மக்களுக்காகத் தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையைப் பத்து

(11 ம் பக்கம் பார்க்க)

## கவின் கலையரங்க இவ்வார நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

தமிழர் கலாசார அவையின் கவின் கலை அரங்கம் அளிக்கும் நிகழ்ச்சிகள் இவ்வாரம் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகமேற்படி அவை அறிவித்துள்ளது.

(11ம் பக்கம் பார்க்க)

## ★ நாவலர் கலாசார மண்டபத்தில் 'எழுக மலையகம் முத்திரை' இன்று வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,சனி

மலையகமக்களின் பிரஜாஉரிமை பறிக்கப்பட்டநாளையொட்டி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி இன்று சனிக்கிழமை மாலை 'எழுக மலையகம்' முத்திரை வெளி

(11 ம் பக்கம் பார்க்க)

## "இயக்கங்களின் கைவிரிப்பு வேதனையைத் தருகிறது"

யாழ்ப்பாணம்,சனி

''எனது மகன் காணாமல் போனதையிட்டு விடுதலை இயக்கங்கள் அனைத்தும் தமக்கு தெரியாதென கைவிரித்தமையே எனக்கு மிகவும் கவலையைத் தருகிறது''

இவ்வாறு கடந்தசில தினங்களாகக் காணாமல்போன யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் தாயார்

(11ம பக்கம் பார்க்க)

### ★ ஒரு அங்கத்துவ நாட்டிலிருந்து மற்றொரு அங்கத்துவ நாட்டுக்கெதிராக

## 'தீவிரவாதிகள் மேற்கொள்ளும் செயல்களை தடைசெய்யவேண்டும்'

### 'சார்க்' மாநாட்டில் இலங்கை வலியுறுத்தவுள்ள யோசனை

கொழும்பு, வெள்ளி

''ஒரு அங்கத்துவ நாட்டிலிருந்து மற்றொரு அங்கத்துவ நாட்டிற்கு எதிராக தீவிரவாதிகள் செயல்படுவது தடைசெய்யப்படவேண்டும்.'' என்று பெங்களூரில் நடைபெறவிருக்கும் 'சார்க்' நாடுகளின் உச்சி மாநாட்டில் இலங்கைத் தரப்பில் வலியுறுத்தப்படவுள்ளது.

சார்க் அணியின் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் ஐனுப் ஹமீத், அமைச்சர்கள் இதுதொடர்பான ஆலோசனையை கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது ஏற்றுக்கொண்டனர் என்றார்

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு குடியரசு ஆகியவற்றின் அரசாங்கத் தலைவர்கள் இரண்டுநாள் உச்சிமாநாடு

(11-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Christombu Farm சேவற் குஞ்சுகள் 19ம் திகதி புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C-5636)

தேநீர் கடைகளுக்குத் தேவையான Electric Boiler விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, சென் சாள்ஸ் பாடசாலை அருகில், யாழ்ப்பாணம். (C 5761)

வெளிநாட்டு நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு தொடர்பு: சண்முகம்றேட்ஸ், 65, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 5657

கனரக மின் துளை யந்திரம் மறு சீரமைக்கப்பெற்ற யப்பான் லேத் யந்திரம் விற்பனைக்குண்டு பிள்ளையார். 257. காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். [C 5757)

Show Case, கதிரைகள், தையல்மெஷின் (Singer Zig-Zag) T V., Dressing table, Kenwood Cooker, Cake mixer, Vono spring beds, Pyrex கிளாஸ் வகைகள் மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு 83/2. K K.S. Rd, கொக்குவில் சந்தி. C 5732

Prima Poultry Food எல்லா வகையான பிறிமா கோழித் தீனும், மருந்து வகைகளும், ஒருநாள் கோழிக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. Nallur Farm Centre, நல்லூர் வீடியோ சென்ரர், 19. முருகேசர் லேன், முத்திரைச் சந்தை, நல்லூர். C 5706

Show case, Bread Slicer. Coffee Perculator, கண்ணாடி மேசைகள், விருந்தைக் கதிரைகள், Singer தையல் மெஷின், கட்டில் மெத்தைகள், எழுது மேசைகள், Electric organ, கசற் றேடியோ, கிளாஸ் வகைகள், Dinner sets, Baby Pram, மற்றும் பல உடன் விற்பனைக்கு M தியாகராஜன், 326, Main Street (St Charles School near) Jaffna. [C5759]

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, Floor Polisher, National Electric Boiler, Fans, English Stainless Steelபாத்திரங்கள், சாப்பாட்டு மேசைகள், அலுமாரி, Steel அலுமாரி, Kenwood Mixer, Steel Bath Tub, ஹோல் செற். Baby Belling Cooker with Oven, கசற் றேடியோக்கள், M தியாகராஜன், 326, Main Street, சென். சாள்ஸ் பாடசாலை அருகில், Jaffna. [C 5760]

வட இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட "மாங்காய் ஊறுகாய்", "வெள்ளைப்பூடு அச்சார்", "தேசிக்காய் ஊறுகாய்" மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G.M 777 K K S. Road and 208 Ist Cross St, Jaffna Telephone: 22611. (C 5069)

Reconditioned HONDA C 90, CHALY மோட்டார் சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: A S B Trade and Engineering, 12, Nallur Cross Rd, Nallur, Jaffna. C 5795

## விற்பனைக்கு

Kenwood Chef Micro Wave Oven, U K. Baby Walker விற்பனைக்குண்டு. தொடர்பு: 52, இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [C 5769]

நல்ல நிலையில் உள்ள Sisil R80 குளிர்சாதன பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: 47, விதானையார் வீதி சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [C 5793]

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters புதியது-பாவித்தது - (Portable - Standard உடன் விற்பனைக்கு. Fudo Enterprises, Jaffna Road Manipay. (Bank of Ceylon-Bitsman) அருகாமையில். C 5791

INCUBATOR குஞ்சு பொரிக்கும் மெசின் 100க்கு கிட்ட அடைவைக்கக்கூடியதும் குறைந்த மண்ணெண்ணைச் செலவில் இயங்கக்கூடியதும் உடன் விற்பனைக்குண்டு. சிக் அன் கைன், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (C5783)

தரமான அரிசி, மாட்டுத்தீன், கோழித்தீன், முட்டை ஆகியவற்றை இங்கே பெற்றுக் கொள்ளுங்கள். யாழ் அரிசிக் களஞ்சியம், ஸ்ரான்லி வீதி (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம். (C 5781)

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் உயர்குலம் சைவக்குருக்கள் குடும்பத்தைச் சார்ந்த சிவந்த நிறமும் அழகும் பண்புமுடைய மணமகன் தொழில் நுட்பக் கல்லூரித் தராதர முடையவர் மேற்பார்வையாளராகவும் மனேஜராகவும் கடமை புரிந்தவர். இதே குடும்பத்தைச் சார்ந்த அல்லது உயர் குலத்தில் சுத்த போசன மணமகன் 35 - 40 வயதிற்குட்பட்டவர் தேவை. ஜாதகக்குறிப்பு முதலான முழு விபரமும் முதற் கடிதத்தில் தெரிவிக்கவும் விளம்பர இல: C 5630 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 5630]

## சேவை

கைரேகை, கிரகநிலை, எண் சோதிடம் என்பனவைக் கொண்டு தங்கள் வாழ்வின் உண்மை நிலை கூறப்படும். மணமகன் மணமகள் தேவையானவர்கள் செவ்வாய்க் குற்றமுள்ள சாதகர்களும் சகல மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். பிரபல கைரேகை எண்சோதிட நிபுணர், செ. நாகேந்திரராசா 174/16 கோவில் வீதி, நல்லூர். கைலாசபிள்ளையார் கோவிலடி. C 5772

## கல்வி

ஆங்கில பரீட்சையில் திறமைச் சித்தி பெற இன்றியமையாத நூல் Model Eng'ish Compositions (Essays, Letters, and dialogues) for years Ten and Eleven by K. M. Selvaratnam, B A. (Lond.) Price: 9-50. கிடைக்குமிடங்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீலங்காபுத்தகசாலை. C 5794

## WANTED

M. L. T. Required for Doctor. Apply Advt No: C-5796 C/o Eelanadu Jaffna. C-5796

## மின் பாவனையாளர் அதிருப்தி

நல்லூர், வெள்ளி

நாவற்குழி மகா வித்தியாலய வீதியில் கடந்த புதன் கிழமை முதல் மின்சார விநியோகம் சீரின்றி மின் பாவனையாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளதால் பாவனையாளர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். (எ)

## தவறிவிட்டது

இல. 152560044 V இராமலிங்கம் சிவாநந்தசுந்தரம் அல்வாய் தெற்கு, அல்வாய் என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் Bond Institution, 58 A, ஸ்ரான்லி வீதியில் சமர்ப்பிக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். C-5801

## வகுப்புகள்

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியில் A/L 87, A/L 88 மாணவர்களுக்கு தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல் O/L 88 மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி தனிப்பட்ட கவனமெடுத்து பிரத்தியேகமான முறையில் கற்பிக்கப்படும். தொடர்பு விளம்பர இல: C- 5787 C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். C-5787

## தேவை

தமிழ் ரைப்பிங் வேலைகள் விசேடமாக 'ஸ்ரென்ஸில் கட்டிங்' கில் நன்கு அனுபவமும் ஆற்றலுமுள்ள ரைப்பிஸ்ட் யாழ் நகரிலுள்ள முன்னணி நிறுவனம் ஒன்றுக்கு உடன் தேவை. சுயவிபரங்கள். கல்வித்தகைமை, ரைப்பிங் தொழில் அனுபவங்களுடன் சொந்தக் கையெழுத்தில் இருபாலாரும் 24 - 11 - 1986 ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விள. இல; C- 5749 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். [C-5749]

அலுமினியம், பித்தளை வார்ப்பதற்கு நன்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். Jaffna Technical Institute, 52/1, Stanley Road, Jaffna அல்லது இல 347, Stanley Road, Jaffna (C 5758)

தமிழ், ஆங்கிலம் தட்டச்சு இயந்திரம் [Typewriters] புதியது, பழையதும் உடன் தேவை. Fudo Enterprises 39/17 Power House Road 3-Rd Lane, Jaffna. [C5780]

அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்வதற்கு ஆண், பெண் இருபாலரும் தேவை நற்சான்றுபத்திரத்துடன் நேரில் வரவும். வீனஸ் 266/1 ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். C-5800

கற்பூரம், மெழுகுவர்த்தி, தேயிலை, அப்பளம் தயாரிப்பதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும் குறிப்பு: (நல்லூர் கோயில் மேற்குவீதி V. அரியரெட்ணம் பழைய 157, புதிய [345] கோவில் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். C-5784

சமையல் பயிற்சியாளரும் (Trainee Cook), பரிமாறும் பயிற்சியாளரும் (Stuwards Trainee) தேவை. விண்ணப்பிக்கவும் இடதுபக்க தபால் உறையில் என்ன வேலைக்கு விண்ணப்பிக்கிறீர்கள் என்பதை குறிப்பிடவும். யாழ். சைனீஸ் றெஸ்ரோரென்ற், 124, R. R. நல்லையா வீதி, யாழ்ப்பாணம். C5789

# யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு குழுவுக்கு மீண்டும் அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் பல்கலைக்கழக மாணவ அமைப்புக் குழுவிற்கு கடந்த 12-ம் திகதி அனாமதேய தொலைபேசிமூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவ் அச்சுறுத்தல் 2-வது தடவையாக விடுக்கப்பட்டுள்ளது.

அவ் அச்சுறுத்தலில் 'சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதித்தால் இடையில் எழும்பக்கூடாது எழும்பினால் நாங்கள் சாகும்வரை அடிப்போம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சைக்கிளில் சென்றவர் 'ஷெல்' தாக்கி பலியானார்

யாழ்ப்பாணம், வெள்

'காலையில் அச்சத்தால் வீட்டிலிருந்த என்மகன் வெடிச்சத்தம் ஓய்ந்ததும் நண்பகல் சைக்கிலில் வெளியில் சென்றபோது 'ஷெல்' தாக்கி மரணமானார்''.

அச்சுவேலிவடக்கைச் சேர்ந்த அ. செ சயந்திரனின் (20 வயது) மரண விசாரணையில் அவரது தந்தை அ செபஸ்தியாம்பிள்ளை சாட்சியமளிக்கும் போது இவ்வாறு கூறினார்.

யாழ்.பதில் நீதவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

தந்தை மேலும் கூறியதாவது: அதிகாலை 6 மணி முதல் எங்கும் வெடிச்சத்தங்கள் பலமாகக்கேட்டன. எல்லோரும் வீட்டிலிருந்தோம் நண்பகல் வெடிச்சத்தம் ஓய்ந்தது என் மகன், சைக்கிளில் வெளியில் சென்றார் அதன்பின் அச்சுவேலிப்பகுதியில் ஷெல் வெடித்தசத்தம் கேட்டது. பின்னர் என்மகன் ஷெல்லினால் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அறிந்தேன். யாழ் ஆஸ்பத்திரிக்கு பிற்பகல் சென்று பார்த்த போது அவர் இறந்துவிட்டார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ஓ-எ)

## இன்று அங்குரார்ப்பணம் மகளிர் அணி

சாவகச்சேரி, வெள்ளி

அறவழிப் போராட்டக்குழுவின் மகளிர்அணி அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று சனிக்கிழமை பணிமனையில் நடைபெறவுள்ளது. இவ் அங்குரார்ப்பணக்கூட்டத்திற்கு வடபகுதியின் பல கிராமங்களிலிருந்து சுமார் 150 பெண் பிரதிநிதிகளும் தொண்டர்களும் பங்கு கொள்ளவுள்ளனர் எனமகளிர் அணியின் தற்காலிகத் இணைப்பாளர்களான செல்விகள் வி. தர்மினி, கே. ராகினி ஆகியோர் தெரிவித்துள்ளனர். (ஊ)

## வங்கி இடமாற்றம்

மன்னார், வெள்ளி

மன்னார் மக்கள்வங்கி தற்சமயம் மன்னார் மூர்வீதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு காசோலை வரவுவைத்தல் ஏனைய வங்கி நடவடிக்கைகள் மட்டும் நடைபெறுகிறது. பணம் கொடுப்பனவு மட்டும் முன்னைய கிளையில் நடைபெறுகிறது தற்சமயம் மக்கள் வங்கி இருக்கும் இடத்தில் இராணுவத்தினர் முகாமிட்டு இருப்பதால் இவ்வொழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## தேநீர் விருந்தும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் களஞ்சியப் பொறுப்பாளராகவும், விற்பனையாளராகவும், லிகிதராகவும் கடமையாற்றிய திருவாளர்கள்: சி இரத்தினசபாபதி, சி. கனகரத்தினம், இ இராசகோபால் ஆகியோருக்கு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் நலன்புரிச் சங்கம் சேவைநலம் பாராட்டு விழாவும் தேநீர் விருந்துபசாரமும் இன்று காலை அளிக்கவுள்ளது.

மேற்படி சங்க மண்டபத்தில் திரு. செ. பத்திநாதர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்திற்கு சங்கத் தலைவர் திரு. சி. சிலமகாராசா முதன்மை விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. இ. ஜெகநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர். [வா]

## நிர்வாகிகள்

ஒட்டுசுட்டான், வெள்ளி

கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் அ. குமாரசுவாமி உபதலைவர்கள் வ. சிவஞானலிங்கம், சி. க. இரசையா செயலாளர் மு. சிவநேசன் உபசெயலாளர் சி. வேதவனம், பொருளாளர் நா. சேதலிங்கம் மற்றும் ஆறு பேர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)

## அஞ்சலி

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை உப அலுவலகத்தில் வருமானவரி மேற்பார்வை உத்தியோகத்தராகக் கடமைபுரிந்து அமரரான திரு. எஸ். சிவசுப்பிரமணியத்திற்கு உப அலுவலக ஊழியர்கள் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் பூதவுடல் உப அலுவலகத்தில் சில நிமிடங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மேற்படி அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. த மகாலிங்கம் அன்னாரின் பணிகளை நினைவுகூர்ந்து உரையாற்றினார். [ஊ]

## பத்து மாணவிகள் சித்தி

உடுவில், வெள்ளி

உடுவில் மகளிர் கல்லூரியில் இவ்வாண்டு நடைபெற்ற 6ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மொத்தம்10 மாணவிகள் சித்தியடைந்துபாராட்டும் பெற்றுள்ளனர். கடந்தவருடங்களை விட இம்முறையே ஆகக் கூடுதலான மாணவர்கள் இக் கல்லூரியில் தெரிவு செய்யப்பட்டமை பாராட்டுக்குரியது.

இக்கல்லூரியைச் சேர்ந்த பி. சுதராணி, பி புஸ்பநாதன், ஆர். பஞ்சலிங்கம், எம். இராசரத்தினம். எஸ். சோமரமணன், என். விக்கினேஸ்வரன், ஜே குணரத்தினம், எஸ். சிவானந்தராசா, பி. சிவாநந்தன் எம் சிவதாசன் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (ஊ)

# வட ஐரோப்பாவிலிருந்து சோவியத் அணு ஏவுகணைகள் வாபஸ்!

லண்டன், நவ 14

வட ஐரோப்பாவிலிருந்து அணு ஆயுத ஏவுகணைகளை வாபஸ்பெறப் போவதாக சோவியத்யூனியன் அறிவித்துள்ளது. அணு ஆயுதங்களை குறைத்துக்கொள்ளும் அதன் திட்டத்துக்கமையவே இந்த வாபஸ் இடம்பெறவுள்ளது.

சோவியத் பிரதிநிதி திரு. யேகோலிகாசோவ் அண்மையில் பின்லாந்து விஜயம் செய்திருந்தார். அந்த ஆர் மேற்கொண்ட தகவலை வெளியிட்டார்.

இது தவிர சோவியத் யூனியனின் வட ஐரோப்பிய இராணுவ வலயங்களான லெனின் கிராட், போசிட்டிக் பிரதேசம் ஆகியவற்றிலிருந்தும் சோவியத் யூனியன் தனது அணுசக்தி ஏவுகணைகளை வாபஸ்பெறவிருக்கிறது இப்பகுதிகளிலிருந்து வாபஸ் பெறும் ஏவுகணைகளை வேறு இடங்களில் வைப்பதற்கு சோவியத் யூனியன் முடிவு செய்துள்ளது.

இதெவேளை தனது அணு ஆயுத ஏவுகணைகளை பெருமளவில் குறைத்து படிப்படியாக இவற்றின் முடக்கத்துக்கு வழியமைக்கப் போவதாகவும் சோவியத் பிரதிநிதி பின்லாந்தில் அறிவித்தார்.

## உலகச் செய்திகள்

சோவியத் - பின்லாந்து எல்லையிலுள்ள கோலாவளைகுடாவில் வைக்கப்பட்டிருக்கும் நடுத்தர ஏவுகணைகள் உட்பட அவற்றைச் செலுத்தும் உந்து தளங்களையும் சோவியத் வாபஸ்பெற உள்ளது.

# ஈரானுக்கு அதிபர் றீகன் இரகசிய ஆயுத விநியோகம்!

வாஷிங்டன், நவ 13

அமெரிக்க அதிபர் றொனல்ட் றீகன் ஈரான் அரசுக்கு இரகசியமாக ஆயுதங்களை விநியோகித்திருப்பது அமெரிக்க காங்கிரஸின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

திரு றீகன் தமது முன்னாள் பாதுகாப்புத்துறை ஆலோசகர் றொபேர்ட் மக்பாலன் மூலமாகவே இந்த இரகசிய ஆயுத விநியோகத்தில் ஈடுபட்டிருந்தார் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் அமெரிக்க ராஜதந்திர வட்டாரங்களில் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து திரு. றீகன் நேற்று தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களுக்கு இது குறித்து விளக்கமளித்தார்.

ஈரானுடன் முறிவடைந்த உறவை மீண்டும் சீராக்கவே தாம் இந்த ஆயுத விநியோகத்தை மேற்கொண்டதாகவும் தமது விநியோகத்தில் சரக்கு விமானமொன்றில் அடங்கக்கூடியளவு சிறியரக ஆயுதங்களே இடம்பெற்றன என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 18 மாத காலமாக இந்த ஆயுத விநியோகம் இடம்பெற்றுவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. லெபனானில் ஈரான்சார்பு ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ள அமெரிக்கர்களை விடுவிக்க திரு றீகன் இந்த ஆயுத விநியோகத்தில் இறங்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அவர் இக்கருத்தை மறுத்துள்ளார். அமெரிக்கர்களை விடுவிக்கத் தாம் ஒரு போதும் கொடுப்பனவுகளை வைத்துக்கொண்டதில்லை என்றார்.

# தென்கொரியாவில் 75 மைல் தூரம் செல்லும் அமெரிக்க ஏவுகணைகள்

சியோல், நவ 14

தென்கொரியாவில் 75 மைல்கள் தூரம் சென்று தாக்கக்கூடிய நடுத்தர அணுசக்தி, அணுசக்தியற்ற ஏவுகணைகளை அமெரிக்கா நிறுத்தி வைக்கவுள்ளது. இவை அமெரிக்காவின் 8 வது இராணுவப் பிரிவுக்குச் சொந்தமானவை என்று தெரிவிக்கப்பட்டது.

வடகொரியாவையும், தென்கொரியாவையும் பிரிக்கும் யுத்த சூனிய வலயத்தில் வடகொரியா இராணுவ ஏவுகணைகளை பொருத்தியுள்ளதையடுத்தே அமெரிக்கா தென்கொரியாவில் மேற்படி ஏவுகணையை நிறுத்தவுள்ளது.

அணுசக்தியைக் கொண்டதாகவும் அணுசக்தியற்றதாகவும், இந்த அமெரிக்க ஏவுகணைகள் விளங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. இவை வடகொரியாவின் இராணுவ இலக்குகளை விரைந்துசென்று தாக்கக்கூடியவை எனவும் தெரிவிக்கப்பட்டது.

# காஸ்ட்ரோவுக்கு மூன்றுவது தடவையாக லெனின் 'விருது!

மாஸ்கோ, நவ 14

கியூபா அதிபர் பிடெல் காஸ்ட்ரோவுக்கு சோவியத் யூனியனின் அதிஉயர் விருதான 'லெனின் விருது' வழங்கப்பட்டுள்ளது.

'ஓடர் ஓவ் லெனின்' என்ற இந்த சோவியத்தின் உயர் விருது மூன்றுவது தடவையாக கியூபா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சோவியத் யூனியனின் நெருங்கிய நண்பர்என்ற ரீதியிலும், கியூபாவுடன் மேலும் கூடுதல் உறவுகளை வைத்துக் கொள்ளும் வகையிலேயே காஸ்ட்ரோவுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

## இரசிகமணி கனக. செந்திநாதன் ஞாபகார்த்த விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், சனி

இரசிகமணி கனக செந்திநாதனின் 9 வது ஞாபகார்த்த விழாவும் பொன் விழா சிறப்புரைகள் நூல் வெளியீடும் குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஆதரவில் நாளை ஞாயிற்றுக்

(9-ம் பக்கம் பார்க்க)


# லங்கெம் M 50 களைகொல்லி

விவசாயப் பெருமக்களே!

உங்கள் நெல் வயல்களில் காணப்படும் அகன்ற இலைக் களைகளை முற்றாக அழிக்க லங்கெம் M 50ஐ பாவியுங்கள்.

நீண்டகாலமாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா விவசாயிகள் பாவித்து பயன் அடைந்த ஒரே களைகொல்லி லங்கெம் M 50.

400 M L. 38-00
4 Litre 325-00

## லங்கெம்

விவசாயிகளின் தோழன்

விபரங்களுக்கு:

லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்,

219, 221, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23454

HEAD OFFICE:

Lankem Ceylon Ltd.,

760, BASELINE ROAD, COLOMBO—9
Telephone:- 598292 — 6

LANKEM

Lankem M-50

MCPA

Active ingredient: Potassium salt of MCPA
400 g/litre

වල් නාශක
களை நாசினி
Weedicide

විෂ
நஞ்சு
POISON

### மணிவாக்கு

அக்கிரமக் காரர்கள் வசித்த எத்தனையோ ஊர்களை நாம் அழித்திருக்கிறோம். அவைகளின் முகடுகள் இடிந்து குட்டிச்சுவராகக் கிடக்கின்றன. இவற்றை உணர்ந்தறிய முடியாதவர் அகக்கண் குருடர்களே!

— திருக்குர்ஆன்

## நமது நோக்கு

## சிசரோ அல்லது விசரோ

ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருளினால்தான், அந்தநாட்டின் மதிப்பு எண்ணப்படும். அது நல்ல பொருளாக இருக்குமானால், அது போகும் இடந்தோறும் அந்த நாட்டை மக்கள் சிந்திப்பார்கள்.

இதற்கு நல்ல உதாரணம் 'சிலோன் டீ'. இலங்கைத் தேயிலையின் தரத்தை உலகில் கேள்விப்படாதவர் யார்? ஆனால் இன்று அதற்கிருக்கும் மதிப்பு நன்றாய் இறங்கிவிட்டது.

இந்தச்செய்தி நிதியமைச்சரின் பட்ஜட்டெக்குத்தான் முக்கியமானதன்று; இன்று நாட்டைப் பீடித்திருக்கும் அரசியல் நெருக்கடிக்கும் முக்கியமானது.

பொருள் என்று சொல்லும்போது மனிதன் உற்பத்திசெய்யும் பண்டங்களை மட்டுந்தான் அதுகுறிக்கவில்லை. பொருள் அனைத்தையும் தயாரிக்கும் மனிதனையும் அது குறிக்கும்

நிதியமைச்சர் ரொனி டி மெல் வெளியிட்ட பட்ஜட்டும் அதன்மேல் அவர் நிகழ்த்திய பேருரையும் இந்த முக்கிய கருத்துக்கு முதலிடம் கொடுக்கவில்லை

பத்துவருட அனுபவம் பெற்றதிறமைசாலி இதனை உணரவில்லையென்று நாம் கருதவில்லை. 'நாம் ஒரு வறியநாடு - அதுவும் இருபது வறியநாடுகளில் இலங்கையும் ஒன்று' என்று குறிப்பிட்டபடியால் இங்குள்ள பல நட்சத்திர ஹோட்டல்களில் உண்டு உடுத்து நடனமாடும் இவ்வூர்ப் பிரமுகர்களுக்கு ஒரு நல்ல அறை அறைந்திருக்கிறார்.

ஏழைகள்வாழ்வு என்றும் 'நக்குத் தண்ணீ'ராக விருந்தபோதும் நாட்டில் காணப்படும் டாம்பீகம் வறுமையை இருட்டடிக்கிறது.

நாமொரு வறியநாடு என்பதால் எங்கள் வரவுக்குமேல் செலவதிகம் என்பதே சாதாரண மக்களின் விளக்கம். செல்வம் கொண்டுவந்த தேயிலை வீழ்ச்சியடைந்தது போல், உழைப்புக்கு உகந்த மனித வளமும் குன்றியதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

இதனை நேரடியாகக் குறிப்பிடாதபோதும் இன்று நாட்டில் நடைபெறும் யுத்தத்தைக் கண்டித்து, அதனை உடனடியாக நிறுத்தும் அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். பாதுகாப்பு விழுங்கிவரும் பணத்திலும் பார்க்க மனிதசக்தி குன்றுவதே உண்மையான வீழ்ச்சி

'பட்ஜட்'என்றால் பொருளாதாரம்; பொருளாதாரம் என்றால் அரசியல், அரசியலென்றால் பாராளுமன்றப் பதவியுடன் தொடர்பான விவகாரங்கள். இதுபோன்ற தவறான விளக்கத்தால் அல்லற்படும் நாடுகளில் இலங்கையும் ஒன்று

சிவில்சேவிலிருந்து வெளியேறிய அமைச்சர் ரொனி அரசியலில் ஒரு சோஷலிசவாதியாகத் தொடங்கி இன்று ஐ. தே. கட்சியின் பெருந்தூணாக பிரதமருக்கு அடுத்ததாகக் கருதப்படும் 'நிதி அமைச்சர்' பதவியைப் பத்துவருடம் வகித்து வந்திருக்கிறார்.

இதற்குரித்தான புகழ்மாலையை எவரும் பறிக்கப்போவதில்லை ஆனால் 10வருடங்களில் 20 வறிய நாடுகளில் இலங்கை ஒன்றாகக் கணிக்கப்படுவதை அமைச்சரின் ஒரு சாதனையாகக் குறிப்பிடலாமா?

நாடு இவ்வளவில் தப்பியொட்டி இருப்பது நிதி அமைச்சரின் அரும்பெரும் சாதனையென்று கூறலாம். ஏனென்று கேட்டால் இந்த யுத்தத்தின் மத்தியில், எட்டாங்கட்டை எழுதப்படாது, நாமொரு நாணயமான மக்கள் என்று கருதக்கூடிய அளவில் போதிய கடனுதவி பெற்றுத் தருகிறார் நிதிஅமைச்சர்

ஆட்சியின் திறந்த பொருளாதாரமே இதற்குகாரணமென்றாலும் இரக்கப்போறவர் சிறக்கப்போகவேண்டுமென்பது நிதியமைச்சரில் நன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

''இந்தப் போரில்லையானால் இலங்கை மூன்றும் உலக நாடுகளில் முன்னணி வகித்திருக்கும்'' என்ற கருத்தும் நிதியமைச்சரின் பேருரையில் இடம்பெற்றிருக்கிறது.

வகுப்பின் கடைசியிலிருந்தும் ஒரு மாணவன் அடுத்த தவணையில் முதலாவதாய் வருவது அசாத்தியமல்ல. கடின உழைப்பு இந்த அற்புதத்தின் காரணமாகிறது.

அதேபோல் இந்தப்போர் எவ்வகையிலும் ஒழியவேண்டும். சமாதானம இன்றேல் பூரண அழிவு என்று வற்புறுத்தியபோது, நிதியமைச்சர் மேற்கோள் காட்ட ரோமாபுரியின் பேரறிஞர் சிசரோ (Cicero) விடம் போனது சிந்தனைக்குரியது.

சிங்களத்தில் பேருரையை ஆரம்பித்த அமைச்சர் ஆங்கிலத்தில் அதனைத் தொடரும்போது லத்தீன் (Classical) அறிவையும்பயன்படுத்தியிருக்கிறார், இது மக்களை யுகமானாலும் வியக்கத்தக்கது.

44 (கி. மு.)ல் ரோமாபுரியில் வாழ்ந்த மிகப்புகழ் பெற்ற தத்துவமேதை சட்டமேதை, அரசியல் மேதை அவருக்குதவியது குறிப்பிடத்தக்கது.

''மிக நியாயமான போரிலும் பார்க்க, மிக அநியாயமான சமாதானம் விரும்பத்தக்கது' என்பதுரோமன் பேரறிஞரின் மணிமொழி. இது எங்கள் நாட்டுக்கு இன்று ஒருஒளிவிளக்கெனக் கருதுகிறார் நிதியமைச்சர். எவ்வகையிலும் சமாதானம்!

எந்த நேரத்திலும் சமாதானம் கிட்டுமோவென்று ஆவற்படுவது இங்குஅழிந்து போகும் தமிழ் மக்களின் அடிப்படைஉணர்வு பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக மனித வளத்துக்கு மதிப்பளிக்காத சமாதானம் நியாயமானதாகாது. நிதியமைச்சர் சிசரோ என்றதும், இதென்ன விசரோ என்று நாம் இந்த நிலைமையிலும் நினைக்கின்றோம்.

நாடனைத்திற்கும் சமாதானம் அவசியம்; அதற்கு மேலாக இலங்கைத் தமிழரின் உயிர் பாதுகாப்புக்கு மிக அவசியம். ஆனால் எவ்வித சமாதானம்?

சிசரோ விசரோ என்ற கேலியை விட்டு உங்களிடம் மேற்கோள் உண்டாவென்று கேட்டால், ஆம் ''சமாதானம் என்பது போரின் வெற்றிபோன்றது; இரு பகுதியினரையும் கௌரவமாக அடக்கிவைப்பது'' என்கிறார் ஷேக்ஸ்பியர்.

---

மலையகத்தமிழரின் குடியுரிமை பறிப்பின் மூலம்

# தமிழர் பிரச்னைக்கு வித்திட்ட தினம் இன்று

நவம்பர் பதினான்காம் திகதி நம் மண்ணில் வாழும் மக்களின் ஒரு பகுதியினருக்கு நடத்தப்பட்ட அநியாயத்தை நினைவுபடுத்தும் தினமாகும்.

இந்நாட்டுப் பொருளாதார வளத்தின் முதுகெலும்பாகத் திகழும் மலையகத் தமிழ் மக்களது வாக்குரிமை 1948ம் ஆண்டு இத்தினத்தில்தான் பறிக்கப்பட்டது.

அன்றைய அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட இந்த வாக்குரிமைப் பறிப்பினால் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகால வரலாற்று பின்னணியைக் கொண்ட மலையகத் தமிழ் மக்கள் அரசியல் அனாதைகளான நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள் அடிமையிலும் பார்க்க மிகமிகக் கேவலமான முறையில் கணிப்பீடு செய்யப்பட்டதுடன், நடத்தவும்பட்டார்கள்.

கல்வி, தொழில்துறைகளில் மட்டுமன்றி சமூக அபிவிருத்தியின் பக்கத்திலும் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். 'கள்ளத்தோணிகள்' என்று இழிவாக அழைக்கப்பட்டனர். பெருந் தேசியவாதத்தால் மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்குமுறையின் ஆரம்ப வடிவம இது எனலாம்.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை உருவாக்கத்தின் நிமித்தம் இலங்கையில் புதியதொரு வர்க்கம் தோற்றுவிக்கப்படலாயிற்று. அதுதான் மலையகத் தோட்டப் பாட்டாளிகள் என்னும் வர்க்கம். இந்த வர்க்கத்தாரின் உழைப்புச் சக்தியும், அதனால் உருவான அந்நிய செலாவணியும் இலங்கை அரசினருக்கு எத்துணை தூரம் அவசியமாக இருந்தபோதும்; அந்த வர்க்கத்தினர் இந்நாட்டு அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதோ, அல்லது அமைப்பாக உருவெடுப்பதோ பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது.

குறிப்பாக மலையகத்தை உள்ளடக்கிய இருபதுக்கு மேற்பட்ட தொகுதிகளின் வெற்றி தோல்வியினை தீர்மானிக்கும் சக்திகளாக மலையகத் தமிழ் மக்களே இருந்தார்கள். மேலும் இம்மக்கள் தமது வர்க்க குணாம்சத்துக்கு ஏற்ற முறையில் இடதுசாரி நிலைப்பாட்டையே மேற்கொண்டனர். இதனை அன்று இடம்பெற்ற இடைத்தேர்தல் ஒன்றின்போது இடதுசாரி வேட்பாளரை வெற்றிகொள்ளச் செய்ததன்மூலம் நிரூபித்துக் காட்டினார்கள்.

இந்த இடைத்தேர்தல் முடிவினைக் கண்டு விழிப்புற்ற முதலாளித்துவ அரசாங்கம். மலையக மக்களின் இந்த நிலைமையைத் தொடரவிட்டால் எதிர்காலத்தில் தங்களது தலைவிதியே மாற்றப்படலாம் என்று அச்சமடைந்தனர். முதலாளித்துவத்தின் தவிர்க்கமுடியாத விளைவு இதுவாகும். இதன் வெளிப்பாடே மலையகத் தமிழ் மக்களது வாக்குரிமை முழுமையாகப் பறிக்கப்படுவதற்குக் காரணமாக அமையலாயிற்று.

இலாப நோக்குடன் இயங்குவது முதலாளித்துவம். வாக்குரிமை அந்தஸ்தை இழந்து நின்ற மலையக மக்கள் அரசியல் ரீதியில் அணுகப்படவில்லை ஏனைய சமூகங்கள் மத்தியில் அரசியற் கட்சிகள் உருவாகியதைப்போல் இம்மக்கள் மத்தியில் உருவாக்கப்படவில்லை மாறாக முட்டிப் பணம்சேர்க்கும் நோக்குடன் தோட்டத்திற்குப் பலவாகவும் லயத்துக்கு ஒன்றாகவும் தொழிற் சங்கங்கள் உருவெடுத்தன இத்தொழிற் சங்கங்கள் தமது சநதாப் பணத்தில் அக்கறைகொண்டனவேயன்றிப் பறிக்கப்பட்ட இம்மக்களின் உரிமை சம்பந்தப்பட்ட விடயத்தில் அக்கறைசெலுத்தவில்லை.

காரணம், இத்தொழிற் சங்கங்களின் ஆதிக்கம் பூர்ஷுவாக்களின் கைகளிலேயே இருந்தது தொண்டமான் தொட்டு அஸீஸ்வரை, சண்முகதாஸன் தொட்டு என். எம் பெரேராவரை சகல தலைமைகளும் பிரஜாவுரிமை அந்தஸ்துடையவர்களாகவும், கௌரவப் பிரஜை உரிமை பெற்றவர்களாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

னிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் அந்த ஒன்றரை லட்சம்பேரும்இந்தியாவுக்குப் பாதி இலங்கைக்குப் பாதி என்று பங்கிடப்பட்டது.

இந்த முதலாளித்துவ அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட நாடற்றோர் சட்டங்கள் மூலம், நாடற்றோர் என்னும் பிரச்னை முற்றாகத் தீர்ந்துவிட்டதாக அரசுதரப்பிலகூறப்படுகின்றது. திரு தொண்டமான் தலைமையிலான இ. தொ. கா. தொட்டு பல தொழிற்சங்கங்களும் இதற்கு ஆதரவாகக் கூக்குரலிடுகின்றன ஆனால் இந்த ஒப்பந்தங்களில் ஏற்படும் நடைமுறைப் பிரச்னைகள் பற்றிய தெளிவற்ற போக்கு இவர்களின் வர்க்க குணாம்சமாகவே உள்ளது.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் மூன்று லட்சம் பேரைத் தான் ஏற்றுக்கொள்வதாகச் சட்டமிருந்தபோதும், இலங்கைப் பிரஜ வுரிமைக்கு மனுச்செய்தோர் ஏறக்குறைய ஐந்து லட்சமாகும். இந்நிலையில் இரண்டு லட்சத்துக்குமேற்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாயின. இதன் மூலம் நாடற்றோர் பிரச்னையானது முற்றுப்பெறுதலின்றாகவே அமைந்துள்ளது.

இன்றைய நிலையில் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்டோர் தொடர்ந்து நாடற்றவர்களாக இருந்து வருகின்றார்கள்.

### மாத்தளை ஆ. இராஜலிங்கம்

காலம்செல்ல மலையக மக்களைப்பற்றிய முடிவினை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளருக்கு உருவானது. இந்திய தேச விஸ்தரிப்புக்கு மலையக மக்கள் துணைபோகலாம் என்ற அச்சம் இதற்கு முக்கிய காரணம்.

இந்நிலையில் இலங்கை - இந்திய அரசாங்கங்களால் நடத்தப்பட்ட அடிமை வியாபாரம் போல் நேரு - கொத்தலாவல, சிறிமா - சாஸ்திரி, இந்திரா- ஜே. ஆர். ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. மனித உரிமைகள் மதிக்கப்படுவதாகச் சொல்லப்பட்ட காலகட்டத்தில் சம்பந்தப்பட்ட அந்தமக்களின் அபிலாஷைகளுக்கு உட்படாத இந்த ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டன.

1948ம் ஆண்டு சீனா சுதந்திரமடைந்த பொழுது இந்தோனேஷியாவைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு குடியிருந்தனர் சீன-இந்தோனேஷிய அரசுகளுக்கிடையே இம்மக்களைப்பற்றிய பிரச்னை எழுந்தது. இரு அரசுகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளின் இறுதியில் சீனாவில் இருக்க விரும்புபவர்கள் சீனாவையே தாய் நாடாக ஏற்றுக் குடிகளாகி இருக்கலாம அப்படியல்லாது இந்தோனேஷியாவுக்குச் செல்லவிரும்புவோர் தமது உடைமைகள் சகிதம் செல்லலாமென்று முடிவு எடுக்கப்பட்டது.

மலையக மக்களைப் பொறுத்தமட்டில் இப்படியான அணுகுமுறையின் அடிப்படையில் அல்லாமல் சந்தையில் மந்தைகளைப் பங்கு போடுவது போலவே நடந்தது.

1964ம் ஆண்டு சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் ஐந்தேகால் லட்சம்பேரை இந்தியா ஏற்பதென்றும், மூன்று லட்சம்பேரை இலங்கை ஏற்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. எஞ்சிய ஒன்றரை லட்சம் பேரைப்பற்றிய முடிவு பின்பு எடுப்பதாகத் தீர்மா

இதன்மூலம் இம்மக்கள் மீது உண்மையான அக்கறையில்லாதவர்களால் இப்பிரச்னையைத் தீர்க்கமுடியாதென்பது தெளிவாகின்றது மாறாகப் பங்கு அடிப்படையில் அல்லாமல இம்மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்றமுறையில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் மூலம் இப்பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும் என்பதுவே உண்மை. அடிப்படையில் தெளிவில்லாத ஆட்சியாளரினால் இது சாத்தியப்படப்போவதில்லை.

இதேவேளை தமக்கெதிராக நடத்தப்படும் அடக்குமுறைக்கெதிராக, இழந்த உரிமைகளை மீட்டெடுப்பதற்கான புதிய சக்தியொன்று மலையகத்தில் உருவாகி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இந்தப் புதிய சக்தியின் வெளிப்பாட்டினை மலையகப் பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் இடம் பெற்றுவரும் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

மலையகத்தில் துளிர்விட்டுள்ள இந்தப் புதிய சக்திக்கு வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இருந்து நீட்டப்படும் நேசக்கரம் உறுதியானதாக அமையுமென்பது திண்ணம். இதன் வெளிப்பாடுதான் நாடற்றோராக்கப்பட்ட இன்றைய தினத்தை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் எதிர்ப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று நடத்தப்படும் எதிர்ப்புத் தினமானது மலையகத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படும் இரண்டாவது நடவடிக்கையாகும். வடக்குடன் மலையகத்தை இணைப்பதற்கான உயிரோட்டமுள்ள இந்த நடவடிக்கை வரலாற்று முக்கியத்துவம் மிக்கது என்றால் மிகையாகாது.

(11ம் பக்கம் பார்க்க)

## முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்

# இறுதித் தூது இஸ்லாம்

அல்ஹாஜ் மௌலவி
கே. எம். எச். காலிதீன், எம். ஏ.
(தலைவர், அ. இ. காதிமார்கள் சம்மேளனம்)

இறைவனின் படைப்புக்களில் சிரேஷ்டமானதும், மேன்மையானதுமான மனிதப் பிறவியினை உயர்நிலைப்படுத்த இறைவன் வகுத்த திட்டமே அவன் தெரிவுசெய்யும் தூதர்களால் இஸ்லாம் மார்க்கத்தின்மூலம் மனித வாழ்க்கையினை நெறிப்படுத்தலாகும் முஸ்லிம்கள் எங்கு வசித்தாலும் இதில் பூரண நம்பிக்கை வைத்துள்ளார்கள். ஆதிமனிதனின் [ஆதம் அலைஹிஸ்ஸலாம ஆதாம்] தோற்றத்திலிருந்து மனித வாழ்க்கையை இறைவன் நெறிப்படுத்தலானான். இவ் வகையில் இறைதூதர்களாக இவ்வுலகில் தெரிவசெய்யப்பட்ட மூஸா அலைஹிஸ்ஸலாம் [மம ஸஸ்] தாவூத அலைஹிஸலாம் [தாவீது] ஆகியோர்களை யூதர்களின் தூதுவர்களாக ஈஸா அலைஹிஸ்ஸலாம் [இயேசு நாதர்] கிறிஸ்தவர்களின் தூதுவராகவும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹவஸல்லம் உலகமக்கள் படைப்பினங்கள் அனைத்தினதும் இறுதித் தூதுவராகவும் வந்தவர்கள் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். இதனையே அல்குர்ஆனும் வலியுறுத்துகின்றது. [முழுமனித சமுதாயத்துக்கும் நற்செய்தி கூறுபவராகவும் [பாபங்களிலிருந்து மீட்சிபெற] அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே உம்மை நாம் அனுப்பினோம் எனினும் அதிகமான மக்கள் இதனை அறிந்துகொள்ள மாட்டார்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.]

கி.பி. 571ம் ஆண்டில் அரேபியத் தீபகற்பத்தில் மக்காவில் பிறந்த முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு தமது 40 வது வயதில் இறைதூது வந்தது. இறைதூதின் பிரதான அம்சம் இவ்வுலகில் மனித சமுதாயத்தை ஒன்றிணைத்து அவர்கள் மத்தியில் ஏகத்துவத்தின் மீது நம்பிக்கையை உருவாக்கி மனித குலத்தை நேர்வழிப்படுத்துவதாகும். குலம், கோத்திரம், இனம், மொழி, வம்சம், அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றையெல்லாம் கடந்த ஒரே மனித சமுதாயத்தை உருவாக்கி அவர்களை இறை பக்தியாளர்களாக மாற்றும் பணியினையே அல்குர்ஆன் என்னும் 'வேத வாக்கியங்களை, முன்வைத்து நபியவர்கள் செய்தார்கள். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இறைவனின் கட்டளைப்படி பல நடைமுறைகளை அவர்களைப் பின்பற்றிய மக்கள் முன் வைத்தார்கள்.

இறை நம்பிக்கையானது பிரிவுபட்டிருந்த பல்வேறு குழுக்களையும் ஒன்றுபடுத்தியது இதனை அதிகாரத்தால் அவர்கள் சாதிக்கவில்லை தமது போதனையாலும் வாழ்வின் நடைமுறையாலும் சாதித்தார்கள் கி. பி 610ல் அவர்களுக்கு இறை தூதுவர ஆரம்பித்தது. 632ல் இறுதியாக முடிவுபெற்றது. சுமார் இருபத்து மூன்று ஆண்டுகால எல்லைக்குள் அல்குர்ஆனின் வசனங்கள் முழுவதும் அருளப்பட்டு இறை தூதும் பூர்த்தியாகியது. அக்கால எல்லைக்குள் அரேபிய தீபகற்பம் முழுவதும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. அங்கு வாழ்ந்த கிறிஸ்தவர்கள் யூதர்கள் ஆகியோரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.

இஸ்லாம், யூத, கிறிஸ்தவ சமயங்களின் வளர்ச்சிப் படியில் இறுதியாக அமைந்ததலை அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதில் சிரமம் இருக்கவில்லை தொழுகை மூலமாக மனித சமுதாயத்தின் சமத்துவம் நிலை நிறுத்தப்பட்டது. தொழுகையின் போது எவ்வித பேதமும் மனிதர்களிடம் காட்டப்படுவதில்லை. எல்லோரும் சமத்துவமானவர்களே என்ற தத்துவம் உண்மையாகவே நிறுவப்பட்டது இதன் மூலம் மனிதனின் ஆணவம் அழிக்கப்பட்டது. ஒருமாதகால நோன்பின் மூலம், ஏழையும் செல்வரும் பசித்தாங்கலின் தன்மைகளையும் ஆத்மாக்களை அடக்கி ஆளும் சக்தியினையும் தூய்மைப்படுத்தும் நிலையினையும் பெற வாய்ப்பளிக்கப்பட்டது. செல்வந்தர்கள் தங்களது சொத்துக்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கு இரண்டரை வீதமான பணம், பொருள் ஆகியவற்றிலிருந்து ஏழைவரி கொடுப்பதற்கு பணிக்கப்பட்டார்கள். வசதியும் சக்தியும் உள்ளவர்கள் வாழ்க்கையில் ஒரு முறையாவது புனித ஆலயமான "ஹரம் த்துலொஹறை" தரிசித்து ஹஜ் கடமையை நிறைவேற்ற கடமைப்படுத்தப்பட்டார்கள்.

இஸ்லாத்தின் நம்பிக்கையூடாகவும் செயற்பாடுகள் ஊடாகவும் முகமது ஸல்லல்லாஹி அலைஹிவஸல்லம் ஏற்படுத்திய புரட்சியின் போது அவர்கள் பல்வேறு நிலைகளிலும் மிகவும் துன்பத்துக்குள்ளாக வேண்டியிருந்தது, அவர்களுக்கு எச் சந்தாப்பத்திலும் இறைவன் மீது பூரண நம்பிக்கையிருந்தது கொலையாளிகள் அவரைச் சூழ்ந்து கொண்டபோதுகூட இந்த நம்பிக்கைமிகவும் உறுதியாகவேயிருந்தது தற்காப்பு யுத்தங்கள்பல நடந்தன, அவற்றுக்குத் தலைமை தாங்கி நடத்திய போதும் வெற்றி தமது பக்கமே என்ற அசையாத இறை நம்பிக்கையோடு செயற்பட்டார்கள். முஹமது ஸல்லல்லாஹி அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றும் முஸ்லிம்கள் உலகசனத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் வாழ்வதற்கு அன்னாரின் போதனைகளும் சாதனைகளும்வழிஅமைந்துள்ளனமனித குலம் அன்னாரின் போதனைகளை ஏற்று நேர்வழிபெற எமது பிரார்த்தனைகள் உரித்தாவதாக.

## திருவிளக்குப் பூசை

யாழ்ப்பாணம், சனி

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் கார்த்திகை தீபவிழா நாளை விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது. மாலை சுவாமியின் வீதி உலா வைத் தொடர்ந்து சுமங்கலிப் பெண்களாலும், கன்னிப் பெண்களினாலும் விசேட திருவிளக்குப் பூசை நடைபெறும்.

## பூசை வழிபாடும் நினைவுகூரல் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம். சனி

சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கம், காலஞ்சென்ற அங்கத்தவர்களின் ஞாபகார்த்தமாகவும், அவர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காகவும் இன்று சனிக்கிழமை கல்லூரி தேவாலயத்தில், சங்கத்தின் தலைவரும், கல்லூரி அதிபருமாகிய அருட்திரு. பிரான்சிஸ் ஜோசப் தலைமையில் காலை பூசை வழிபாடும், அதைத் தொடர்ந்து சங்க மண்டபத்தில் நினைவு கூரல் சொற்பொழிவுகளும் நடாத்தவுள்ளது.

அண்மையில் இராணுவ தாக்குதல்களினால் பலியான அருட்திருமேரி பஸ்ரியன் திரு. ஜேசுதாசன் உட்பட இன்னும் பலரினதும் ஞாபகார்த்தமாகவும் இந்நிகழ்ச்சி யாழ் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர்சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நினைவுகூரல் சொற்பொழிவுகள் அருட்திரு. அருமைநாயகம் திரு. அன்ரன் அல்பிறட் ஆகியோரினால் நிகழ்த்தப்படவுள்ளது.

சிரேஷ்ட உப தலைவர் டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் சங்கத்தின் சார்பில் இந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளார். [வி]

மீண்டும் இலங்கையில்

லோர்ஸ்பேன்* 40 ஈசி

குளோர்பைரிபோஸ் 40%




எச்சரிக்கை:- எல்லா பீடை நாசினிகளும் அபாயகரமானவை கவனமாக கையாளவும்.

விவசாயிகளின் முதல் தேர்வு

பூச்சிநாசினி

மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-
நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,
உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்,

| | |
|---|---|
| 100 மி.லீ. | ரூ. 55/- |
| 200 மி.லீ. | ரூ. 98/- |
| 500 மி.லீ. | ரூ. 215/- |
| 1 லீட்டர் | ரூ. 420/- |

ANGLO-ASIAN AGRO CHEMICALS

அங்லோ-ஏஷியன்
பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்,
சாற்றரட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

* அமெரிக்க டௌ கெமிகல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்.

# பணம், கடவுச்சீட்டு மோசடி செய்தவர் பிணையில் விடுதலை

## தமிழீழ ராணுவ நீதிச்சபை விசாரணை

பண்டத்தரிப்பு, வெள்

வெளிநாட்டு பிரயாண முகவர் நிலையமொன்றின் பெயரை பயன்படுத்தி பல லட்சம் ரூபா மோசடிசெய்த நபர் ஒருவரை தமிழீழ இராணுவ நீதிச்சபை விசாரணையின்பின் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

இந்நபர் பிரயாண முகவர் நிலையமொன்றின் பெயரைப் பயன்படுத்தி சிங்கப்பூரில் வைத்து 16 லட்சத்து 77 ஆயிரம் ரூபா மோசடி செய்ததாகவும், 203 பேரின் கடவுச் சீட்டுகளை தவறானமுறையில் பயன்படுத்திடதாகவும் குற்றம் சாட்டிகைதுசெய்யப்பட்டார்.

பெரியவிளானில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழீழ இராணுவ நீதிச்சபை முன் இவர் விசாரணைக்காக ஆஜர் செய்யப்பட்டார்.

பளையில்வைத்து கைது செய்யப்பட்ட இந்த நபர் நீண்ட நேரம் விசாரிக்கப்பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (சி)

'விஜி' விடயம்

# 'எமது வாழ்வின் நிச்சயமற்ற தன்மையைக் குறிக்கிறது'

யாழ்ப்பாணம், சனி

"யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் காணமல் போனது சம்பந்தமாக தொடர்ந்து நீடிக்கும் மர்மம் அனைத்து விடுதலை இயக்கங்களிற்கும் அனைத்து மக்களிற்கும் அவமானம் தரும் செயல்மட்டுமன்றி எதிர்காலத்தில் எமது இனத்தின் வாழ்வின் நிச்சயமற்ற தன்மையினையும் எடுத்துக் காட்டுகிறது"

இவ்வாறு யாழ்.வெளிவாரி மாணவர் ஒன்றியக்குழு யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு குழுவிற்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

விஜிதரன் காணமல்போன மர்மம் தொடர்ந்து நீடிப்பது நியாயம் கற்பிக்கமுடியாத ஒரு மகாமூடத்தனமான செயல். மேலும் விஜிதரன் விரைவில் திரும்புவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு இதுசம்பந்தமாக பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்தும் நியாயமான போராட்டத்திற்கு வெளிவாரி மாணவர் ஒன்றியம்பூரண ஆதரவை வழங்குவதுடன் அப் போராட்டத்தில் இணைந்து கொள்வதெனவும் முடிவு செய்துள்ளது (சி)

## 'பஜனுவளி' வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

அமரர் தபு விஸ்வப்பா அவர்களின் 2ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 'பஜனுவளி' வெளியீட்டுவிழா எதிர்வரும் 22ம் திகதி சனிக்கிழமை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசியபரபரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். (சி)

## யாழ்/புனித ஜோன் பொஸ்கோவில் சித்தியடைந்தோர்

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் வெளியான 5ம் தர புலமைப்பரிசில் பர்ட்சையில் யாழ் மாவட்டத்தில் 235 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள். இவர்களில் யாழ்ப்பாண வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள 36 மாணவர்கள் அவர்களில் 21 மாணவர்கள் யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்களாவர் அவர்களின் விபரம் வருமாறு:

சு. ஜெயச்சித்திரா, கி. நிரந்தரக்குமார், கு பிரசாந்தி, பா. முருகதாசன், கி. டிரேஷ் சி மேனகா க. ராதிகா, சி. தர்சானு, தி. தர்சினி, மு நிசாந்தன், சோ. பிரபாகரன், செ. விபுலன், சு. சிவசிறீஸ்கந்தன், த. சுதர்சன், வி சிவறூபன், க. சிவாஜினி, ந மீரா, த. சுவேதலவ, சி. சர்மிளா, கு. பார்த்தீபன், க. விஜித்தா.

## 1,500 ரூபா வழங்குமாறு தீர்ப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

தமது 9 1/2பவுண் நிறையிலுள்ள தாலிக்கொடியை 16 வருடங்களுக்கு முன்பு பருத்தித்துறையை சேர்ந்த ஒருவர் வீட்டில் அடைவுவைத்ததாகவும் இந்த தாலிக்கொடியை மீட்கபணத்துடன் சென்றபோது தாலிக்கொடியை சம்பந்தப்பட்ட வீட்டுக்காரர் தர மறுத்துவிட்டதாகவும் மாதகலைச்சேர்ந்த பெண்ஒருவர் மாதகல் தமிழீழ கிராம நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தார்

இரு குதியினரையும் அழைத்துவிசாரணை செய்த மாதகல் தமிழீழ கிராமிய நீதிமன்றம் தாலிக்கொடிக்குப் பதிலாக 1,500 ரூபாவை பிரஸ்தாப அடைவுவைத்த பெண்ணுக்கு கொடுக்கவேண்டும் என்று அடைவுபிடித்த வீட்டுக்காரருக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கியது. (எ)

## பொற்றொழிலாளர் அறிக்கை

யாழ்ப்பாணம் சனி

பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் மர்மமான முறையில் காணமல்போயிருப்பது அறிந்து யாழ். வீதியிலுள்ள விழக்கிலங்கை பொற்றொழிலாளர்கள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

யாழ். குடாநாடு ஸ்ரீலங்கா ராணுவத்தின் கையிலன்றி பேராளிகள்வசம் இருக்கும் இவ்வேளையிலும் விஜியின் கடத்தல் மாயமாகவே உள்ளது. பிரதான இயக்கங்கள் தலையிட்டு விஜியின் விடுதலையைப் பெற்றுத் தரவேண்டும். இல்லையேல் பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்படும் உண்ணாவிரத போராட்டத்தில் நாமும் கலந்துகொள்வோம் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

## மஸ்ற உத்தீன் மாணவர் மீலாத் விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மஸ்ற உத்தீன் முஸ்லிம் பாடசாலையில் இன்று சனிக்கிழமை மாலை மஸ்ற உத்தீன் மாணவர் மீலாத் விழா பாடசாலை அதிபர் ஜனாப் எம். எஸ். எம் ஷிஹாபுத்தீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக மேற்படி பாடசாலை முன்னாள் அதிபரும் சமாதான நீதிபதியுமான அல்ஹாஜ் எம். எம். எஸ். அப்துல்காதரும் சிறப்பு விருந்தினராக யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி.சிவானந்தனும்கலந்து கொள்வார்கள்.

விழாவின் இறுதியில் பாடசாலை மாணவ மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (சி)

## அகதிகளுக்கு உதவி

சாவகச்சேரி, வெள்

திருமலை, சாம்பல்தீவு, உப்புவெளி ஆகியஇடங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக படகுகள் மூலம் முல்லைத்தீவுவழியாக யாழ் பிரதேசத்துக்கு வந்திருக்கும் சுமார் 200 குடும்பங்களுக்கு அறவழி போராட்ட குழு ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு வாரகால உணவுப் பொருட்களை இவ்வாரம் பணிமனையில் வழங்கியது.

யாழ் பிரதேசத்திலிருக்கும் ஏனைய முகாங்களில்தங்கியிருக்கும் இவ்வாறான அகதிகளுக்கும் நேரிடையாகச் சென்று, அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. (எ)

## நள்ளிரவில் இளைஞன் கைது

திருநெல்வேலி, வெள்

புத்தளம் கிராமத்திலுள்ள உடப்பு என்ற கிராமத்தில் வசிக்கும் செந்தில்நாதன் அல்லது ராஜன் என்பவர்புத்தளம் அதிரடிப்படை பொலிஸாரால் நள்ளிரவு வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

85ம்ஆண்டு நடைபெற்றநிக்கவெரட்டியா வங்கி கொள்ளையின்பின் உடப்புபகுதியில் பலர் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டு வந்தனர். இதன்பின் இக்கிராமத்தில் இராணுவ, பொலிஸ் அதிரடிப்படையினரின் கூட்டு ரோந்து நடவடிக்கைகளும், சுற்றி வளைத்து தேடும் நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன.

இறுதியாக புத்தளம் மாவட்டத்தில் பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி திரு விஜயநாயக்கா தலைமையில் சென்ற சுமார் அறுபது அதிரடிப்படையினர் இரவு 11 மணியளவில் பல வீடுகளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி செந்தில்நாதன் அல்லது ராஜன்என்றபெயரை கொண்ட இளைஞனை கைது செய்து தம்முடன் அழைத்து சென்றனர்.

படையினரின் தேடுதல் வேட்டையில்

# திருமலையில் 100பேர் கைது

## புதிதாக இராணுவ முகாம்

[திருமலை நிருபர்]

திருகோணமலை மாவட்டத்தில் சுடந்தவாரம் ராணுவம் மேற்கொண்ட தேடுதல நடவடிக்கையில் சுமார் 100 பேர் கைதுசெய்யப்படடு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் புதிய முகாமொன்றையும் ராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

திருகோணமலையில் ஆரும்கடடை நிலாவெளி, கோபாலபுரம், இறக்கக்கண்டி, கும்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளைக் கடந்தவாரம் சுற்றிவளைத்து காலைமுதல் மாலைவரை தேடுதல் மேற்கொண்ட ராணுவத்தினர் 300க்கும் அதிகமானோரைக் கைதுசெய்து விசாரணையின் பின்னர் சுமார் 200 பேரை விடுதலை செய்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டவர்களில் சுமார் 70பேர்வரை மேல் விசாரணைக்காக திருமலை கோட்டை முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கோபாலபுரம் என்னும் இடத்தில் புதிய ராணுவ முகாம் ஒன்றையும் அமைத்துள்ளனர். இங்கிருந்து 2மைல்களுக்கப்பால்தான் நிலாவெளி முகாம் அமைந்துள்ளது.

இதனை அடுத்து நிலாவெளிக்கு புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் திருமலையிலிருந்து சாம்பல் தீவுவரையுமே பஸ் சேவை இடம் பெறுகிறது. புதிய முகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த பஸ் சேவை நிலாவெளிவரை நீடிக்கப்பட்டுள்ளது. (கி)

## அநாதரவாக கைவிடப்பட்டது!

வவனியா வெள்ளி

மன்னார் வேப்பங்குளம் வீதியில் வைத்து கடந்த ஞாயிறன்று கடத்திச்செல்லப்பட்ட சபாநாதன் என்பவருக்குச் சொந்தமான வான் அதேவீதியில் வைத்து கைவிட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. (எ.

## கோரிக்கை

பருத்தித்துறை வெள்ளி

யாழ். பல்கலைக்கழக மாணவன் செல்வன் அ. விஜிதரனை விடுதலைசெய்யுமாறு யாழ். தொழில் நுட்பக்கல்லூரி தொழிற்கல்வி மாணவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# இணக்கசபைமூலம் விவாகரத்து தீர்ப்பு

யாழ்ப்பாணம் சனி

கணவனின் அடி உதையைத் தாங்கமுடியாத பெண் இணக்க சபையின் மூலம் விவாகரத்துப் பெற்றுள்ளார்

கோண்டாவில் குமரகோட்டம் பகுதியைச்சேர்ந்த ஒரு பெண்ணே தனது நாலு வருடக் குடும்ப வாழ்க்கைக்கு இவ்வாறு முற்றுப்புள்ளிவைத்துள்ளார்.

மேற்படி இந்த வழக்கை விசாரணை செய்த கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச்சங்க இணக்கசபை மேற்படி கணவனால் சீதனமாகப் பெறப்பட்ட பதினையாயிரம் ரூபா பணத்தினை அப்பெண்ணிடம் திருப்பிக்கொடுக்கும்படி தீர்ப்பளித்துள்ளது. [ரா]

## இலவச பயிற்சி வகுப்புகள்

வேலணை வெள்ளி

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட கால்நடை வளர்ப்பாளர் சங்கத்தினர் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த படித்த வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு இலவச கால் நடை வளர்ப்பு பயிற்சி வகுப்புக்களை நடாத்தவுள்ளது. மேற்படி பயிற்சி வகுப்பில் ஆடு, மாடு, கோழி, பன்றி, முயல் ஆகியன வளர்ப்பது பற்றியும் அவற்றிற்கேற்படும் நோய்களை அடுத்து அவற்றிற்கெவ்வாறு தடை ஊசிபோடுதல் என்பது பற்றிய விளக்கங்களையும் இப்பயிற்சி வகுப்புக்களில் விளக்க முன்வந்திருக்கின்றனர். இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்ளவிரும்புபவர்கள் வேலணை கால் நடைவளர்ப்பாளர் சங்க செயலாளருக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஊ)

## மருந்து தட்டுப்பாடு நீங்கியது

பண்டத்தரிப்பு வெள்ளி

இவ்வருடகடைசி காலாண்டுக்கான மருந்து வகைகள் கடந்த திங்கட்கிழமையன்று சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கும், பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கும் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கும் யாழ். சுகாதாரத் திணைக்கள மருந்துக் களஞ்சியபகுதியினரால் லொறிமூலம் நேரடியாகக் கொண்டுசென்று விநியோகிக்கப்பட்டதையடுத்து இவ்வைத்தியசாலையில் நிலவிவந்த மருந்துத்தட்டுப்பாடுநீங்கியுள்ளது. (எ)

## தொழிலுக்கு சென்றவர்மீது சூடு

யாழ்ப்பாணம் சனி

சுருட்டுத் தொழிலுக்காக அதிகாலை வல்வெட்டித்துறைக்குச் சைக்கிலில் சென்றுகொண்டிருந்தசமயம் வல்லையில் இராணுவத்தினர் சுட்டதால் நவக்கிரியைச்சேர்ந்த என். சுந்தரலிங்கம் காயமடைந்தார்.

இவர் கடந்த சிலதினங்களுக்குமுன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டார்.

வீதிக்குக்குறுக்கே பாலத்திற்கு பாவிக்கப்படும் சிமெந்துக் குயாய்களை போட்டு போக்குவரத்தைத் தடை செய்துவிட்டு இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததாக காயமடைந்தவர் தெரிவித்தார்.

புலோலியில்

## மரம்நாட்டு விழா

பருத்தித்துறை, வெள்

வடமராட்சி சூழல் பாதுகாப்பு மரநடுகை ஸ்தாபனம் எதிர்வரும் 19ம் திகதி புலோலியில் மரம்நாட்டு விழா வொன்றினை நடாத்தவுள்ளது

தென் புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய அருகாமையில் வடமராட்சி சூழல் பாதுகாப்பு மரநடுகை ஸ்தாபனப் பணிப்பாளரும் செயலாளருமான திரு. எஸ். ரீ. மார்க்கண்டு தலைமையில் இம் மரம்நாட்டும்விழா நடைபெறும்.

இலங்கை பனம்பொருள் அபிவிருத்திச் சபைப் பணிப்பாளரும் வடமராட்சி சூழல் பாதுகாப்பு மரநடுகை ஸ்தாபனப் போஷகருமான திரு. க. கனகராஜா இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை இலவசமாக வழங்குவார். அத்துடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி புற்றளை மகாவித்தியாலயம் புற்றளை சித்திவிநாயகர் ஆலயம் ஆகியவற்றிலும் திரு. கனகராசா மரக்கன்றுகளை நாட்டி வைப்பார்.

இம்மரம் நாட்டும் விழாவுக்கான ஒழுங்குகளை வடமராட்சி சூழல்பாதுகாப்பு மர நடுகை ஸ்தாபன உதவித்திட்டப்பணிப்பாளரும் உதவிச் செயலாளருமான திரு ஏ. என் எஸ். திருச்செல்வம்மேற்கொண்டுள்ளார்.

* * *

அராலி வெள்ளி

தமிழீழ விடுதலைப்புலிகளின் மன்னார் பிராந்தியதளபதி விக்டரின் 31வது நாள் நினைவு தினத்தையொட்டி அராலிமக்களினால் மரம்நாட்டப்பட்டது.

அராலிப் பகுதிகளில் உள்ள வெட்ட வெளியான இடங்கள் தெருவோரங்கள் அரானப் பாலத்துக்கு அண்மித்த இடங்களிலெல்லாம் பலவிதமான மரங்கள் நாட்டப்பட்டன.

# நெஸ்கியூறிற்றி '86

1 ம் பரிசு : ஆயுள் முழுவதும் மாதாந்தம் ரூ. 1000/- (அல்லது ரூ 100,000/- ரொக்கம்)

2 ம் பரிசு : ஆயுள் முழுவதும் மாதாந்தம் ரூ. 500/- (அல்லது ரூ. 50,000/- ரொக்கம்)

3 ம் பரிசு : ஒவ்வொன்றும் ரூ. 25,000/- கொண்ட மூன்று பரிசுகள்

150 ஆறுதல் பரிசுகள் : ஒவ்வொன்றும் ரூ 300/-

## உங்கள் சுபீட்சத்திற்கு வழிகோலும் மகத்தான போட்டி!

ஆம், இதுவே உங்களுக்கு அரிய வாய்ப்பு. நெஸ்கியூறிற்றி 86. வாழ்நாள் முழுவதும் மாதாமாதம் ரூ.1000/- வழங்கும் இதுபோன்ற போட்டி இலங்கையில் வேறெதுவும் கிடையாது. இப் போட்டியில் வெல்வதும் சுலபமானது.

### போட்டி விபரம்

போட்டிக்கான கூப்பனை நீங்கள் இலகுவில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக நெஸ்டோமோல்ட் ரின் இப்பொழுது காகித லேபலினுல் சுற்றப்பட்டு வருகின்றது. கூப்பனும் போட்டி விதிகளும் இந்த லேபலில் அச்சிடப்பட்டுள்ளன. போட்டிக் காலத்தில் மட்டுமே இந்த லேபல் நெஸ்டோமோல்ட் ரின்னில் ஒட்டப்பட்டிருக்கும். நெஸ்டோமோல்ட் பக்கெட்டின் பின்புறத்திலும் வெட்டியெடுக்கக்கூடிய கூப்பனும் போட்டி விதிகளும் காணப்படும். விதிகளைக் கவனமாக வாசித்துக் கூப்பனைச் சரியாக நிரப்பவும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு முழு லேபல் அல்லது பக்கெட்டில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரண்டு கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியே அனுப்பப்பட வேண்டும். எவ்வளவு கூடுதலான விண்ணப்பங்களை அனுப்புகிறீர்களோ அவ்வளவு கூடுதலான வெற்றி வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

### வாழ்நாள் முழுவதற்குமான வருமானம்

1 ம், 2 ம் பரிசுகளை வெல்வோருக்கென இலங்கை வங்கியில் விசேட கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு முறையே ரூ. 100,000/- உம் ரூ. 50,000/- உம் வைப்புச் செய்யப்படும். இரு அதிஷ்டசாலி களும் இந்தத் தொகைகளினுல் முறையே ரூ. 1000/ உம் ரூ. 500/- உம் மாதாந்தம் பெறுவார்கள். அல்லது அவர்கள் விரும்பினுல் மொத்தத் தொகையை உடனடியாகவே பெற்றுக் கொள்ளலாம்.

எண்ணிப் பாருங்கள். எவ்வளவு பெரிய அதிஷ்டம். உங்கள் சுபீட்ச வாழ்வுக்கு வழிகோலக்கூடிய மகத்தான வாய்ப்பு இதுவல்லவா?

### போட்டி விதிகள்

1. சகல விண்ணப்பங்களும் தெளிவாகவும் சரியாகவும் நிரப்பப்படுதல் வேண்டும்.
2. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும அனுப்பலாம். ஆனுல், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு ரின் லேபல் அல்லது பக்கெட்டிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரண்டு கூப்பன்கள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
3. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நெஸ்கியூறிற்றி '86" என்று குறிப்பிடப்பட்டுச் சகல விண்ணப்பங்களும் நெஸ்லே லங்கா லிமிட்டெட், த. பெ. எண் 2061, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்
4. முதல் நான்கு வாரங்களிலும் முதலாவதாகக் கிடைக்கும் 25 செல்லுபடியான விண்ணப்பங்களுக்கும் முந்துவோருக்கான பரிசாக தலா ரூ. 100 வழங்கப்படும். இவர்கள் ஏனைய பரிசுகளைப் பெறுவதற்கும் உரித்துடையவர்கள்.
5. நெஸ்லே லங்கா லிமிட்டெட், சிலோன் நியூட்ரிஷனல் ஃபூட்ஸ், தொம்ஸன் லங்கா ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கை வாழ் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இப்போட்டி தொடர்பான எவ்வித கடிதத் தொடர்புகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது.
7. வெற்றியீட்டுவோரின் பெயர்கள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

100 முந்துவோருக்கான பரிசுகள்: ஒவ்வொன்றும் ரூ.100

கூப்பன் பக்கட்டில் அச்சிடப்பட்டுள்ளது.

முடிவு தினம் டிசம்பர் 31

வாழ்நாள் முழுவதும் மாதாந்தம் ரூ.1000/- அல்லது ஒரே தடவையில் ரூ.100,000/- ரொக்கம்




விலை: ரூ. 46/-

விலை: ரூ. 27/-

JWT NL 2038 Licence No: S/542

# "வார்ட்டில் தேடிய சகோதரனை சவச்சாலையில் கண்டேன்"

## மரணவிசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி அச்சுவேலியில் ஷெல் வெடித்து ரங்க்குமார் காயமடைந்ததாக அறிந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு இரவு 10 மணிக்குச் சகல வார்ட்டுகளிலும் தேடிப் பார்த்தும் அவனரக் காணவில்லை கடைசியில் ஆஸ்பத்திரி சவச்சாலைக்குச் சென்று பார்த்தபோது அவரது சடலம் கிடந்தது.

ஆவரங்கால் கி ரவிக்குமாரின் '18 வயது' மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது சகோதரன் ரவிசேகரன் இவ்வாறு கூறினர்.

யாழ் பதில் நீதவான் கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

சகோதரன் மேலும் கூறியதாவது: இறந்தவர் படித்துவிட்டு விவசாயம் செய்து வந்தார். காலை முதல் வெடிச் சத்தங்கள் கேட்டன. நண்பகல் வெடிச் சத்தம் நின்றதும அவர் உறவினர் ஒருவர் வீட்டிற்கு சைக்கிளில் சென்றார் அவர் சென்றபின் வெடிச் சத்தம் கேட்டது. பிற்பகல் 2 மணிக்கு முருகுப்பிள்ளை என்பவர் வந்து ஷெல் தாக்கி சயந்திரன் என்பவர் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக கூறினர் நாங்களும் யாழ் ஆஸ்பத்திக்குப் போய் தேடிப் பார்த்தோம். அங்கு சயந்திரனின் சடலம் தான் இருந்தது.

திரும்பி வீட்டிற்கு 6மணிக்கு வந்து பார்த்தோம் வீட்டில் அவர் இல்லை திரும்பவும் இரவு 10மணிக்கு காரில் யாழ் ஆஸ்பத்திரிக்கு சென்று பார்த்தோம். சவச்சாலையில் அவரது சடலம் இருந்தது.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (இ- எ)


## செனித் வழங்கும் மற்றுமொரு பரந்த சேவை

இந்தியாவில் விசேட பயிற்சிபெற்ற

திரு. பாலாஜி (சிவாஜி)

அவர்களின் நேரடிக் கண்காணிப்பில்

விளம்பர போஸ்டர்கள்
திறப்புக் கோர்வையில் விலாசம் பதித்தல்
சில்க்ஸ்கிரீன் (எல்லா வகையானதும்)
பெயர்ப்பலகைகள் (ஸ்தானங்கள் மற்றும் நிலையங்கள்)
கலண்டர் டிசைன்கள்
உங்கள் திருமண அழைப்பிதழ்கள் (டிசைன்கள்)
வாழ்த்துப்பாக்கள் (டிசைன்கள்)
எல்லா வகையான விளம்பர ஸ்டிக்கர்கள்
பிறந்த நாள் வாழ்த்துமடல்கள் (டிசைன்கள்)
பிளாஸ்டிக் பெயர் பலகைகள் (எல்லாவகை)
துணிவகைகளுக்கு டிசைன்கள்
உங்கள் பத்திரிகைகள் புத்தக டிசைன்கள்
வியூகாட் டிசைன்கள்
மற்றும் உங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு கவர்ச்சி கரமான பெட்டிகள் மற்றும் ஒற்றுத் தாள்களில் அச்சிடும் டிசைன்கள்

உங்கள் விளம்பரங்களுக்கு டிசைன்கள் எது வேண்டுமானுலும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது திரு பாலாஜி அவர்கள் உங்களை நேரில் வந்து சந்திப்பார் அல்லது ஒரு தபால் அட்டைமட்டும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புங்கள்.

ஜோ. எகட்டன்
செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
19/3, கொழும்புத்துறை வீதி,
(மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

நாங்கள்
விளம்பரத்துறையில்
விற்பன்னர்கள்

- புதுமையின் உறைவிடம் செனித் -

விளம்பர வடிவமைப்பு:
ஜோ. எகட்டன்
செனித் ADS யாழ்நகர்
(A 2873)


## பாஸ்போட்பெற விரைவில் புதியதிட்டம்

கொழும்பு, வெள்ளி பாஸ்போட் பெறுவதற்கு புதிதாக விண்ணப்பிப்போர் விரைவாக அதனைப்பெறும் வகையில் புதியதிட்டம் ஒன்றினை அரசு வெகுவிரைவில் அமுல்படுத்தவுள்ளது.

இதன்மூலம் விண்ணப்பதாரி ஒருவர் பாஸ்போட்டிற்குவிண்ணம்பித்து ஆறுமணித்தியாலத்துள் அதனை பெறவிரும்பின் 500ரூபா பெறுமதியான முத்திரையும், இரண்டு நாட்களாயின் 400 ரூபா முத்திரையும், மூன்று நாட்களாயின்330 ரூபா முத்திரையும்' நான்கு நாட்களாயின் 250 ரூபா முத்திரையும் விண்ணப்பத்தில் இணைக்கவேண்டும்.

தற்போது பாஸ்போட் பெறுவதற்கு 200ரூபா முத்திரை இணைக்கப்படுகிறது. (கி)

## அன்பளிப்பு

உடுவில் வெள்ளி

உடுவில் உதயசூரியன் சனசமூக நிலையம், உடுவில் ஸ்ரீலங்கா சனசமூக நிலையம் ஆகியவற்றிக்கு பல ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களும் மின்சார பல்புகளும் உடுவில் மக்கள் குழுவினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

உடுவில் மக்கள் குழுவின் ஆண்டுக் கூட்டத்தில் மக்கள் குழுசார்பில் உடுவில் கிராம சேவையாளர் திரு.எஸ் ஆறுமுகம் அவர்களால் இப்பொருட்கள் மேற்படி இரு சனசமூக நிலைய தலைவர்களிடம் கையளிக்கப்பட்டன. (ஸ)



முல்லை வெற்றிக்கிண்ணத்திற்காக முல்லைத்தீவு பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் சாம்பியனுனது.

மேற்படி வித்தியாலயத்தைச்சேர்ந்த உதைபந்தாட்டக் கோஷ்டி தலைவன் செல்வன் பொ. சத்தியரூபன் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு செல்வரத்தினத்திடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில், செம்மலை மகாவித்தியாலயத்திற்கும், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கும் இடையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் 4—0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான "முல்லைக் கிண்ணம்" முல்லைத்தீவு அரச அதிபர் திரு. க. பொன்னம்பலத்தினுல் அன்பளிப்புச் செய்யப்பட்டதாகும். (எ)

## சேவைக்கால பயிற்சி, செயல் அமர்வு

வேலணை, வெள்ளி வேலணை வட்டாரப் பாடசாலைகளிலும், கொத்தணிப் பாடசாலைகளிலும் 1987ம் ஆண்டில் 3-ல் கல்வி கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான ஐந்து நாள்சேவைக்கால பயிற்சியும் செயல் அமர்வும்கடந்த வாரம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.


தலைவலியா! நெஞ்சு வலியா,
நாரிப்பிடிப்பா! ஜலதோசமா!
இதோ மீண்டும்
அறிமுகப்படுத்துகின்றோம்!
தோலகட்டி
றோசரின் பாம் (ROSARIAN BALM)
(குருதைலம்)

நீங்கள் இஞ்சித்தும் சிந்திக்கத் தேவையில்லை
ஆம்! தலைவலி நொடிப்பொழுதில்
சிட்டென பறந்திடும்.

என்றும் சிறந்ததைபே கடந்த 30 வருடகாலமாக உள்ளூரிலேயே வழங்கிவரும் தோலகட்டி தயாரிப்பாளர்களின் அதிசக்திவாய்ந்த மூலிகைகளினுல் தயாரிக்கப்படுகின்றது. றோசரின் குருதைலம்.
சித்த வைத்தியர்களின் ஒத்த கருத்துக்களின் படியும் அலோசனைக்கிணங்கவும் தயாரிக்கப்படுகின்றது.

றோசரியன் குருதைலம்
நீங்களும் மாறுங்கள் றோசரியன் குருதைலத்திற்கு

ஏகப் பிரதிநிதிகள்:
ஜோ. எகட்டன்
செனித் மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
19/3, கொழும்புத்துறை வீதி,
குண்டுக்குளி, யாழ்நகர்.

இது ஓர் உள்ளூர் உற்பத்தி என்பதனை மறவாதீர்கள்

விளம்பர அமைப்பு:-
ஜோ. எகட்டன்
செனித் யாழ்நகர்.
[A 2874]



# விவசாயிகளே!

உங்கள் நெல்வயல்களில் மடிச்சுக்கட்டியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதனுல்

லெபேசிட் ஈ சி 50%
(பென்தியோன்)

| விலை: | |
|---|---|
| 100 மி லீ. | ரூ. 35/- |
| 200 மி லீ. | ரூ. 65/- |
| 450 மி லீ. | ரூ. 115/- |

பாவித்து முழுமையான கட்டுப்பாட்டை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பாயர் இரசாயனம் விவசாயிகளின் பெருவிளைச்சலின் உறுதுணை

BAYER

ஹேகெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி, கொழும்பு – 10.

இது ஒரு மேற்கு ஜேர்மன் தயாரிப்பு
[A 2865]

## விஜிதரன் மர்மம்

# அனைத்துமுற்போக்கு சக்திகளுக்கும் அச்சுறுத்தல்

### வர்த்தக சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி யாழ் பல்கலைக்கழக 3ம்வருட வணிகபீட மாணவன் அ விஜிதரன் மர்மமாக காணமல போயுள்ளது அனைத்து முற்போக்குசக்திகளுக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இயக்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் யாழ்ப்பணத்தில் சம்பவம்நடைபெற்றது வேதனைத்துக்குரியதென்றும்.

இவ்வாறு யாழ் வர்த்தகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மாணவன் எதுவிதநிபந்தனையுமின்றி மனித பிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டுமென மேலும் அந்தஅறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வா)

''தமிழ்பேசும் குற்றம் ஒன்றிற்காக தமிழ்பேசும் மக்களினது உடமைகளும், உரிமைகளும் பறிக்கப்படட்டு, தமிழ்மக்கள் அனைவரும் சொந்த மண்ணிலே அகதிகளாகிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட விஜிதரன் தமது சொந்த மண்ணை விட்டு கல்வி கற்பதற்காக இங்கு வந்தார் யாழ் பல்கலைக்கழகம் நடாத்திய மாணவர்களின் அடக்கு முறைகளுக்கு செதிரான சகல போராட்டங்களிலும் பங்கேற்றவர்களில் ஒருவர். அந்த விஜிதரன் மர்மமாகமறைந்துவிளது அனைவரும் அறிந்ததே. அன்று கேசவன்; இன்று விஜிதரன், நாளை......?

''இப்படி ஒவ்வொரு மாணவரும் காணமல் போவதால் எமக்கேற்படும் இழப்புக்கள் பற்றி இன்று நாம் உணரா விட்டாலும் என்றுவது உணருவது திண்ணம். தனது சொந்த ஊரைவிட்டு யாழ்ப்பாணமக்களை நம்பித்தான் எமது சகமாணவன் விஜி இங்கு வந்தான். ஆனல் நம அவனுக்கு செய்த உபகாரம் என்ன? இச்செயல் யாழ்ப்பாண மக்களுக்கு மிகவும் அபகீர்த்தியை உண்டாக்கியுள்ளது.

''எமது மண்ணை மீட்க போராடிக்கொண்டு யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் விடுதலை இயக்கங்களே, பொது மக்களே எமது சகமாணவன் விஜிதரனை மீட்டு எம்மிடம் ஒப்படைக்கு மாறு யாழ் பல்கலைக்கழக நுண்கலைபீட மாணவர்களாகிய நாம் கேட்டுக்கொள்கிறோம்''.

---

## வேலணையில்

# விக்டர், கணேஷுக்கு நினைவுத்தூபி

வேலணை, வெள்ளி அடம்பனில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்குமிடையே நடைபெற்ற நேரடி மோதலின் போது மரணமடைந்த மன்னார் மாவட்டத் தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமான விக்டருக்கும், மூதூர் பிராந்திய தளபதி கணேசுக்கும் மற்றும் மரணமடைந்த தமிழ்ஈழ விடுதலைப்புலி இயக்கத்தைச் சேர்ந்த வீரர்களுக்குமு நேற்று முன் தினம்வேலணையில் ஞாபகார்த்த தூபிகள் திறந்துவைக்கப்பட்டன இத்தூபியில் வீர மரணமடைந்த விக்ரரின் தாயார் ஒளித்தீபத்தை ஏற்றி வைத்தார்

அதன்பின் வணபிதா எவ். கிருபானந்தன் அடிகளார், பிரமஸ்ரீ ஜெ சந்திரகாந்த சர்மா ஜனாப் ஏ. எஸ். அகமது ஆகியோர்கள் முறையே நினைவுத்தூபிகளுக்கு மலர் மாலைகளை அணிவித்தனர்.

வணபிதா எஸ். கிருபகினந்தன் தலைமையில் கிறிஸ்தவ ஆராதனையும், ஜனாப் எ எஸ். அகமது தலைமையில் இஸ்லாமிய முறையில் அஞ்சலியும் பிரமஸ்ரீ ஜெ சந்திரகாந்தசர்மா அவர்களால் இந்துசமய முறையில் ஆராதனைகளும் இடம் பெற்றன

இவற்றைத் தொடர்ந்து அருட் திரு எவ் கிருபானந்தன் அடிகளார் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடை பெற்றது, இக்கூட்டத்தில் புலவர் திரு. சிவசாமி, திரு. கி பீற்றர், திரு. கி. பி. சேவியர், திரு நா. நாகரெத்தினம், ஆசிரியர் ச மாணிக்கவாசகர், க. சி. கதிர்காமநாதன், தீவக மாதர் அணியின்தலைவி திருமதி தி. பத்மாவதி ஆகியோர்கள் உட்பட பலர் மறைந்த விடுதலை வீரர்களின் சேவையினைப் பாராட்டி அஞ்சலியுரை நிகழ்த்தினர்கள்.

செல்வி மாலினி இரத்தினம் விக்ரரின் தோற்றம் சேவை என்பவற்றை மையமாகக் கொண்ட கவிதை ஒன்றினைப் பாடினர் இதன்பின அனைவருக்கும் நன்றி கூறப்பட்டது. இறுதியில் விக்ரரின் இறுதி ஊர்வலப்படக்காட்சியும் காட்டப்பட்டது.

---

## தைப்பொங்கல்

# தினத்தன்று உழவர் விழா நடாத்த ஏற்பாடு

உடுவில், வெள்ளி உடுவில், சண்டிலிப்பாய். உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கிய உடுவில் கமநல சேவைக் குழுவினர் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்துடன உழவர் விழாவையும் விவசாயப் பொருட்காட்சியையும் நடாத்துவதற்கு முவு செய்துள்ளனர்.

உடுபில் கமநலசேவைக் கட்டடத்தில் நடைபெற்ற இதற்கான கூட்டத்தில் கமநல சேவையாளர்கள், பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம் தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் தலைமையிலான குழு ஒன்றும் இதற்காக தெரிவுசெயயப்பட்டுள்ளது.

உழவர் விழாவை முன்னிட்டு விவசாயிகளைக் கௌரவிக்கும் முறையிலான பல போட்டிகளை நடாத்துவதென்றும் பரிசுகள் வழங்குவதென்றும், வீட்டுத்தோட்டம், நெற்செய்கை, உபஉணவுப் பயிர் செய்கை, கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் போட்டிகள் நடாத்தி சிறந்ததாக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பரிசுகள் வழங்குவதென்றும். விவசாயப் பொருட்காட்சிகளையும் கல்வித்திணைக்களம் விவசாயத்திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் உடுவில் உதவி அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் நடாத்துவதென்றும், பொருட்காட்சியில் பாடசாலைகள் விவசாயப்பிரிவுகளுக்கிடையே செயல் ரீதியான பொருட்காட்சியை போட்டி அடிப்படையில் நடாத்தி பரிசுகள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் உடுவில் கமநலசேவைக் குழுவின் உபதலைவராகப் பலகாலம்கடமையாற்றி அண்மையில் காலஞ்சென்ற வலிகாமம் வடக்கு பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவாளர் திரு எஸ் கந்தசாமி அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டு அவரின் குடும்பத்தினருக்கு அனுப்பி வைக்கப்பட்டது (வா)

---

## அந்தஇரு வயோதிபர்கள்

யாழ்ப்பாணம் சனி தெல்லிப்பழை அரச மருத்துவ மனையில் முதலாம் வார்ட்டில் இரண்டு வயோதிபர்கள் இடதுபக்க இடுப்பு மூட்டெலும்பு முறிந்தமையால் ஆப்பிரசன் செய்யப்பட்ட நிலையில் இருக்கின்றார்கள்.

ஒருவர் துன்னாலையைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி தா. வன்னியசிங்கம்(78வயது) மற்றவர் கவியரசு வெண்பா மணி முருகசூரியன் (65வயது).

இவர்கள் இருவரும் தங்கள் வருத்தத்தையும், உடல் நிலையையும் பொருட்படுத்தாது கந்தஷஷ்டி விரதத்தை அனுஷ்டித்தார்கள்.

இவர்கள் இருவரும் பகற் பொழுது 3 நேரம் பால் மட்டும் பருகி உபவாசம் இருந்தார்கள்.

---


காரைநகர் பலகாடு நாச்சிமார்கோவில் எனவழங்கும்

**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்**

**பகிரங்க அறிவித்தல்**

இத்தால் சகல பொதுமக்களுக்கும் அறியத் தருவதாவது, கடந்த 1985ம் ஆண்டு வைகாசிமாதம் காரைநகர் கடற்படைத்தள விஸ்தரிப்பிக்காக அதன் சுற்றுடலிலுள்ள வீடுகளையும், காணிகளையும் அரசினர் சுவீகரித்தபொழுது கோவிலுக்குரிய பூசகர் குடியிருக்கும் வீட்டையும் அதனுடன் சேர்ந்த காணியையும் சுவீகரித்தது யாவருக்கும் தெரியும். பரம்பரை பரம்பரையாக எமது வழித்தோன்றல்களால் தனிப்பட்ட நிர்வாக அமைப்பின் கீழ் பரிபாலிக்கப்பட்டுவந்த மேற்படி கோவிலையும் அதற்குரிய ஆதனங்களையும் 1943ம் ஆண்டிலிருந்து காலஞ்சென்ற எனது தந்தையார் இராமு கந்தப்பு செல்லத்துரை அவர்கள் பொறுப் பேற்று தனது நிதிமூலமும், பொதுமக்களின் நிதிமூலமும்திருப்பணி வேலைகளைச் செய்து 1966ம் ஆண்டு ஆவணி மாதம் மஹ கும்பாபிஷேகம் நடைபெற்று, 1978ம் ஆண்டு அவர் காலமானபின் அவரின்மகனாகிய செல்லத்துரை கணேசமூர்த்தி ஆகிய நான் எனது உடன் பிறந்தவர்களின் சம்மதத்துடனும் ஆதரவுடனும் மேற்படி கோவிலையும் அதன் ஆதனங்களையும் பொறுப்பேற்று எஞ்சியுள்ள திருப்பணி வேலைகளை எனது நிதி மூலமும், பொதுமக்களின் நிதமூலமும் நிறைவு செய்து 1983ம் ஆண்டு தைமாதம் கும்பாபிஷகம் நடைபெற்றது உங்கள் அனைவருக்கும் தெரியும். மேற்படி கோவிலையும் அதன் ஆதனங்களையும் எங்கள் பரம்பரையாரிடம் எனது தந்தையார் பொறுப்பேற்று பரிபாலனம் செய்துவந்த காலத்திலும் சரி, அவர் காலமான பின் எனது காலத்திலும் சரி சகல பொதுமக்களின் ஆதரவும், வரவேற்பும எங்களுக்கு இருந்ததேயன்றி, நிர்வாக சம்பந்தமாகவோ, வேறெவ்வழியிலுமோ எவ்வித அட்சேபனையோ, எதிர்ப்போ ஏற்பட்டதில்லையென்று மகிழ்வுடன் தெரிவிப்பதுடன் அவர்களுக்கு நன்றியதலையும் தெரியப்படுத்துகின்றேன். அரசினரால் சுவீகரிக்கப்பட்ட பூசகர் குடியிருக்கும் வீட்டிற்கும், அதன் காணிக்கும் உரியநஷ்ட ஈட்டை பெற்றுக் கொள்ள எனது உடன் பிறந்தோர்கள் உற்சவ உபயகாரர்கள், நித்திய பூசைக்கு நிதிஉதவுவோர், வழிபடுவோர் ஆகியோரின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுச்செய்து உரியவிசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்பதையும், இந் நஷ்டஈட்டு விவகாரத்தில் சகலரின் ஒத்துழைப்பும், ஆதரவும் எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் அம்பிகையின் திருவருளை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

செல்லத்துரை கணேசமூர்த்தி,

தருமகர்த்தா,

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்.

பலகாடு,

காரைநகர்,

12-11-1986

[C 5799]


---

## வீடமைப்புக் கடன் வழங்க ஏற்பாடு

நெடுந்தீவு, செவ்வாய் உப - உணவுப் பயிர்ச் செய்கையின் கீழ் நெடுந்தீவு தெற்கு வெல்லைப் பகுதியில் காணி வழங்கப்பட்டவர்களை அங்கு குடியமர்த்தி அப்பகுதியை அபிவிருத்தி செய்யும் பொருட்டு காணிச் சொந்தக்காரருக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு ரி ஏ அரியரட்ணம் மேற் கொண்டுள்ளார்.

இதற்கான விபரங்களை விசேஷ சேவை அலுவலர் திரு. ந. நடராசா சேகரித்து உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளார்.

குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் தேர்ந்து எடுக்கப்பட்ட நாற்பது குடும்பங்களுக்கு இவ் வீடமைப்புக் கடன் வழங்கப்படும் என்றும் இவ்வாண்டு பத்துப்பேருக்கும் அடுத்த ஆண்டு மிகுதி முப்பது பேருக்கும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது (சி)

---

## இரசிகமணி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை காலை தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது

கனக செந்திநாதன் நினைவு நாள் நிகழ்ச்சிகளுக்கு கலைப் பேரரசு ஏ. ரி பொன்னுத்துரை தலைமை தாங்கவுள்ளார். பொன்விழா சிறப்புரைகள் நூல் வெளியீட்டு விழாவுக்கு கலாகேசரி ஆ தம்பித்துரை தலைமை தாங்கவுள்ளார். திரு. எஸ் திருச்செல்வம் நூலை வெளியீட்டு வைப்பார். [ஊ]

---


**John Keels Products**

**Broilers/Sausages & others**

கிடைக்கும் இடங்கள்

ரோயல் பார்மசி } பெரியகடை
வரணி பார்மசி }

ரோயல் பார்மசி - நல்லூர்

சிறில்ஸ் - சுண்டுக்குளி

அனிதா - கச்சேரி

ரவீந்திரா - பிரதான வீதி

சுப்பையா அன் சன்ஸ் - திருநெல்வேலி

ந ராசா கடை - உரும்பிராய்

SOLES AGENT:

**Theva Associates,**

435/9, TEMPLE ROAD, NALLUR.

Christombu broilers from Colombo available.

Quality guaranteed. (C 5792)



யாழ். இளமங்கையர் கிறிஸ்தவ சங்கம்

Y W C A நடாத்தும்

**சுவரொட்டி, கட்டுரை, கவிதைப் போட்டி**

விடயம்: நான் விரும்பும் சமாதானம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல மாணவர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்

சுவரொட்டி- 9ம் ஆண்டும் அதற்குக் கீழுள்ளோரும்.
கட்டுரை - 10ம், 11ம் ஆண்டுகள்
கவிதை - 12ம், 13ம் ஆண்டுகள்

கட்டுரை 300 சொற்களுக்குக் குறையாததாகவும், கவிதை 12 வரிகளுக்கு குறையாததாகவும் இருக்க வேண்டும். உங்களது ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது உபஅதிபரின் உறுதிப்படுத்தலுடன் 8-12-86க்கு முன் தலைவர், வை டபிள்யூ சி ஏ 42, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

வெற்றிபெற்றோருக்கு சான்றிதழ்களும் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்படும்.

எல். ஆர். நவரத்தினசிங்கம்,

தலைவர்,

இள மங்கையர் கிறிஸ்தவ சங்கம்,

யாழ்ப்பாணம்.

(C 5778)

## முதலாம் வருட நினைவஞ்சலி



திருமதி விஜயலக்சுமி சுந்தரலிங்கம்


தோற்றம்: 14-05-34
மறைவு: 15-11-85
திதி: 04-12-86

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய அன்பின் திருக்கொழுந்தே, நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்; உங்கள் பிரிவால் துயருறும்:

அன்புக்கணவன், மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்.
140/10, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C 5715)

## 6-வது ஆண்டு நினைவஞ்சலி



சதாசிவம் சண்முகம்

மலர்வு: 12-04-1920
உதிர்வு: 22-10-1980

அன்பின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அணைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே, அணைந்துவிட்ட உங்கள் நினைவுச்சுடர் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. எங்களை விட்டுப் பிரிந்துசென்று ஆறுண்டு ஆகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.
37/3, சிவகுருநாதாலேன்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5788)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற தாவடி ஆறுமுகம் நடராஜா எனபவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல: T/83

1. செல்லையா சிவசுப்பிரமணியமும்
2. பெண் பாக்கிய லட்சுமியும், தாவடி தெற்கு, கொக்குவில்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.

வரைவு:
நடராசாவும்,
சபாநாதனும்.
மனுதாரின் சட்டத்தரணி.

(C 5756)

## 60-ம் நாள் நினைவஞ்சலி



அருணாசலம் சிதம்பரநாதன்
(இராசாவின் தோட்டம், மணிப்புரி, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 03-05-63
மறைவு: 13-09-86

பிரிவால் துயருறும்:
பெற்றோர், சகோதர, சகோதரியர், உறவினர், நண்பர்கள்.

(C 5797)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் சரவண முத்து மகேஸ்வரன்

அன்னைமடியில்: 7-11-1927
இறைவனடியில்: 18-10-1986

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும், எங்கள் குடும்பத்தின் ஒளியாயும் பண்பின் உறைவிடமாயும் விளங்கிய அமரர் ச மகேஸ்வரனின் அந்தியேட்டிக் கிரியைகள் 17 11 86 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம். அன்னாரின் பூதவுடலை வவுனியாவிலிருந்து கொண்டுவர உதவிய அன்பர்களுக்கும், ஈமக்கிரியைகளில் பங்குபற்றிய யாபேருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி;

மனைவி, பிள்ளைகள்;

(C 5725)

## இன்றைய பலன்

மாதம்- ஐப்பசி
திகதி- 29 15 - 11 - 86
கிழமை- சனி
திதி- சதுர்த்தசி
பி. ப. வரை
நட்சத்திரம்- அச்சுவினி
காலை 9-33ன் மேல் பரணி

மேடம்: நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும் செய்தொழில் மூலம் நஷ்டமேற்படும். வீண் விவாதங்களும் ஏற்படும். எதிலும் அவதானம்.

இடபம்: இசைத்துறையில் ஆர்வம் காட்டுவீர்கள். அபிப்பிராய பேதங்கள் மறையும்; கணவன் மனைவி உறவு முறை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்;

மிதுனம்: வீணான வார்த்தைகளால் மனது புண்படும். தொழிலிலும் முட்டுக்கட்டை தென்படும். கடிதமொன்றும் கவலையைத்தரலாம்.

கடகம்: பூமியால் லாபமுண்டு. பொது சனத்தலைமையுமுண்டு. ஆசிரியர்களுக்கு சுபதினம்.

சிங்கம்: உயர்வழியில் நடப்பீர்கள். தெய்வ சிந்தையும் மேலோங்கி நிற்கும் தொழில் நலனுமுண்டு.

கன்னி: பேராசையின் மூலம் அவப்பெயர் கேட்கவும் நேரிடும். விபரீதங்களும் விளையும். கடமையிலும் அதிக கவனம் செலுத்தவும்.

துலாம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் இணைவர் குடும்பப் பிரச்சனைகளில் சுமுகமான நிலை தென்படும். இன்று பொன்னான தினம்.

விருச்சிகம்: கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றும். சுறுசுறுப்புக் குன்றும். குடும்பத்திலும் பூசல்கள் தோன்றும்.

தனுசு: மனதில் உற்சாகம் பிறக்கும். நீண்டநாள் எதிரிகள் மீண்டும் உறவு கொண்டாடுவார்கள். தொழிலும் சீர்பெறும்.

மகரம்: எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும் வாகன விருத்தியுண்டு. உளமான நன் மாற்றமும் ஏற்படும்.

கும்பம்: மக்களின் பிரபல்யம் மகிழ்ச்சியில் ஆழ்த்தும். அறிவுத்தாகம் மேலிடும் லாபகரமான தொழிலும் விருத்தி பெறும்.

மீனம்: பணம் பறி போவதற்கு இடமுண்டு முகமன் பேசுவோர் விடயத்தில் அவதானம் வேண்டும். எவ்விடயத்தையும் நன்கு ஆலோசித்தபின்பே செயல்படுத்தவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## 90-ம் நாள் நினைவஞ்சலி



தெட்சணாமூர்த்தி சத்தியவரராசா

மலர்வு: 20-10-64
உதிர்வு: 18-08 86

குடும்பத்தின் ஒளிவிளக்காய், கொளைக்கணி கலனாய், பண்பின் பிறப்பிடமாய் பொற்பார் குணக்குன்றாய் நின்றவனே, சத்தியா, உன் கண் உறங்கியது, ஆனால் உறவோர், நண்பர் கண்கள் உறங்க மறந்தனவே. உற்றாரும், பெற்றோரும் உனையலே நிற்கப்பிரியாத பெருந்துயரால் பேதலித்து நிற்கின்றோர். வாழ்வின் தலைவாசலில் வந்துவிட்ட உனக்கு வாழ்க்கை நலம் காணக் கிடைத்திலதே என்று வருந்துகின்றோம். உன்தன் பிரிவால் வருந்திடினும், உயர்பேறு மருகவனவேண்டி இதயஞ்சலியைத் தருகின்றோம்

பெற்றோர், உடன்பிறந்தோர் பெருமக்கள், மருமகள், உறவினர், நண்பர்கள்.
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(C 5748)

## கேள்வி அறிவித்தல்

### பாலருக்கும், மாணவர்களுக்குமான உருக்குக் கதிரைகள் வழங்கல்

பாலருக்கும், மாணவர்களுக்குமான கீழே குறிப்பிட்டிருக்கும் உருக்குக் கதிரைகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏதாவது அரசாங்க திணைக்களங்களில் உருக்குத் தளபாடங்கள் வழங்குநராகப் பதிவு செய்துள்ளவர்களிடமிருந்து யாழ்ப்பாணம், பிரதேசக் கல்விப்பணிப்பாளர் 1986-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 17-ம் திகதி நண்பகல் 10-00 மணிவரை கூறுவிலைகளை (தீணைப்படிவங்களில்) ஏற்றுக்கொள்ளுவார்.

I. பாலருக்கான உருக்குக் கதிரைகளை வழங்கல். (கணியப் பட்டியல், விபரக் கூற்றுக்கள், நிபந்தனை என்பவற்றை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களக் கணக்காளரிடம் பார்வையிடலாம்).

II. மாணவருக்கான உருக்குக் கதிரைகளை வழங்கல். (கணியப் பட்டியல், விபரக் கூற்றுக்கள், நிபந்தனைகள் என்பவற்றை யாழ்ப்பாணக கல்வித்திணைக்களக் கணக்காளரிடம் பார்வையிடலாம்]

02. திட்டவட்டமான கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு (01) மாத காலத்துக்குள் விவரக் கூற்றுப் பிரகாரமான வழங்கல் முடிக்கப்பெறுதல் வேண்டும்

03. மேல் விவரங்களை யாழ்ப்பாணம், கல்வித் திணைக்களக் கணக்காளரிடமிருந்து 1986 கார்த்திகை மாதம் 15-ம் தேதியுட்பட அத்தேதி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

04. கூறு விலைகளைத் திறத்தல்

கூறுவிலைகளைத் திறக்கும்போது கேள்வியாளர்கள் சமுகமாகவிருக்கலாம் சமுகமளித்திருக்கும் கேள்வியாளர்களுக்கு கூறுவிலைகள் வாசித்துக் காட்டப்படும். சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் பிரதிகளை ஆராய்ந்தறிய அவர்கள் அனுமதிக்கப்படுவர். 1986 கார்த்திகைமாதம் 17-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு கூறு விலைகள் திறக்கப்படும்.

05. இவ்விடயம் சம்பந்தமாக 23 - 10 - 86 அன்று "ஈழமுரசு" "ஈழநாடு" பத்திரிகைகளில் வெளியான கேள்வி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்கவும்.

இ. சுந்தரலிங்கம்,
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1986 - 11 - 12.

(A-3104)

SKYROSE ELE^TRONS
NO 1 HOSPITAL ROAD. JAFFNA:
MAXELL கசட்டுகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் மற்றும் பதிவு செய்யப்பட்ட பழைய, புதிய, பக்தி பாடல்களும் மற்றும் திரைகதை வசனம், நகைச்சுவை என்பனவும் பெற்றுக் கொள்ளவும் மேலும் L P. E P. இசைத்தட்டுக்களை பெற்றுக்கொள்ளவும். மற்றும் நீங்கள் விரும்பிய பாடல்களை பதிவு செய்யவும்.
RECORDING BY EQUALIZER
இன்றேநாடுங்கள்
ஸ்கைரோஸ் எலற்றோன்ஸ்
இல: 1, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். [C-5782]

87 A/L
DAY CLASS
பிரிவு III ஆரம்பமாகி விட்டது
PURE / APPLIED } MATHS—10-50 To 12-30
ZOOLOGY — 1-30 — 2-30
BOTANY — 2-30—3 30
PHYSICS — 3-30—-430
CHEMISTRY—4-30—5-30
[எமது வழமையான ஆசிரியர் குழுவால் கற்பிக்கப்படுகிறது.
New Master Institute,
B. M. C. LANE, JAFFNA. [A 2868]

## உதைபந்தாட்டப் போட்டியில்

# யாழ்ப்பாணக் கல்லூரியிடம் சென். பற்றிக்ஸ் தோல்வி!

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் - யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில், வருடாந்தம் நடைபெறும் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இம்முறை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தை தம்வசப்படுத்திக் கொண்டது.

'ஏ' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில், யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆட்டம் சிறப்பாக இருந்தது. இடைவேளையின் பின்பு யாழ்ப்பாணக் கல்லூரி 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப் போட்டது. ஆட்டம் முடிவடைவதற்கு சில விநாடிகள் இருக்கும்போது சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு கிடைத்த 'பெனல்டி' உதையை கோல் போட முடியாதபடி யாழ்ப்பாணக் கல்லூரி கோல் காப்பு வீரர் தடுத்தது குறிப்பிடத்தக்கது.

வெற்றிக் கோஷ்டிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிரான்ஸிஸ் ஜோசப் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார்.

இப்போட்டிக்கு, திரு. வி. திருஞானசம்பந்தர் மத்தியஸ்தம் வகித்தார்.

'பி' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் 2—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு டி. ஏ. எம். குணசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

'ஸி' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற போட்டி வெற்றி-தோல்வியின்றி (1-1) முடிவடைந்தது.

இப்போட்டிகள் அனைத்தும் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது. [வி]

---

### தமிழர்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சவ்வாத்துக் கத்திகளால் தேயிலைச் செடிகளைச் செப்பனிட்டவர்கள் தங்களது சீரழிந்த வாழ்க்கையினைச் செப்பனிட அந்தச் சவ்வாத்துக் கத்திகளையே தூக்கியுள்ளனர். அந்தக் கவ்வாத்துக் கத்திகளால் மறுக்கப்பட்ட உரிமைகள் மீட்கப்படுவது நிச்சயமே.

---

யாழ் மாவட்ட
அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,

## அறிவித்தல்

எமது தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் கால்நடை உணவுகளை விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் உணவுகளைக் களஞ்சியப் படுத்துவதற்கு போதிய இடவசதியை ஏற்படுத்தல் வேண்டும். ஒரு தொன்னுக்கு மேலாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு 5% விற்பனைக் கழிவு வழங்கப்படும் பதிவு செய்யப்பட்ட முகவர்களுக்கு போக்குவரத்து விநியோகம் இலவசம். விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு 26-11-86ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
யாழ் மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

[A-3107]

வெலிங்டன்
திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
ROMANCING
THE STONE
(Action and Thrills)
[Coluor]

### ஈரோஸ் ஏற்பாட்டுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தினரால் இன்றைய தினத்தை எதிர்ப்புத்தினமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

மலையகத் தமிழ் மக்களின் அவலங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் தமிழ பிரதேசங்கள் அனைத்திலும் பல எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தப்படவும் உள்ளன. (ரா)

---

### அராஜகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்கு முன் வெளிப்படையாக முன்வைத்தது யாழ் பல்கலைக்கழகமே! இது ஒரு சிறு குழுவினரின் தனிப்பட்ட போராட்டம் அல்ல; மக்களின் போராட்டமே!

★ வியட்னாம், பங்களாதேஷ், ஈரான் போன்ற எந்நாட்டிலும் ஜனநாயகத்திற்காகப் போராட்டங்கள் நடைபெற்ற வேளையில் அவை பல்கலைக்கழகத்திலேதான் ஆரம்பிக்கப்பட்டன; ஆட்சியாளரின் அழுப்புகளும் அந்நாடுகளில் பல்கலைக்கழகத்திலேயேதான் முதலில் நடைபெற்றது.

★ எமது மாணவர்களும் ஒரு ஊர்வலத்திலும், இருமறியல் போராட்டத்திலும் பங்குகொண்டவர்கள் அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டத்தில் குதிக்க ஆயத்தமாகிவிட்டனர்.

★ பிற்போக்கான முதலாளித்துவச் சட்டங்களில்கூட பல்கலைக்கழகங்களில் இராணுவமோ, பொலிசோ நிர்வாகத்தின் அனுமதியின்றித் தலையிட முடியாது.

★ நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்குள் சுதந்திரமாகப் படிக்கவே மாணவர்களாகிய நாம் விரும்புகிறோம்.

★ எமது போராட்டம் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதுஎன்பது தவறானது.

★ சுதந்திரத் திற்காகப் போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட மனிதர்களாக வாழ்வதை நாம் வெறுக்கிறோம்.

### இயக்கங்களின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினமிரவு பல்கலைக்கழகம் வருகைதந்து அங்கு உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ள மாணவர் மத்தியில் அழுத விழிகளுடன் கலங்கிய நிலையில் கூறினர்.

நேற்று முதலாம் கட்ட இரண்டாம் நாள் உண்ணாவிரதம் நடைபெற்றது. இதில் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மாணவரும் மருத்துவபீட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரிலும் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது கொக்குவில் நடைபெற்ற உண்ணாவிரதத்தை விஜிதரனின் பெற்றோர் முடித்துவைத்தனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, இளவாலை புனித கென்றிஅரசர் கல்லூரி ஆகியன பங்குபற்றின. (சி)

---

### எழுக மலையகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யீட்டுவிழாவை நடத்தவுள்ளது.

இந்த முத்திரை வெளியீட்டு விழா நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1948 நவம்பர் 15ல மலையக மக்களின் பிரஜா உரிமையை சிறிலங்கா அரசு பறித்தது முதல் அவர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். அன்று முதல் இந்த நடவடிக்கை பாட்டாளி மக்களின்மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு பேரிடியாகவே அமைந்துள்ளது. இத்தினம் அம்மக்களின் வரலாற்றில் ஒரு கறைபடிந்த, சேறு பூசப்பட்ட ஒரு தினமாகும்.

எனவே இத்தினத்தில் நடைபெறவுள்ள முத்திரை வெளியீட்டுவிழாவில் சகலரையும் பங்குபற்றுமாறு ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி வேண்டுகோள்விடுத்துள்ளது. (மா)

---

## பிரயாண ஒழுங்கு

அதிவிரைவில் அவுஸ்ரேலியா செல்ல விரும்புவோர் 21ந் திகதிக்கு முன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

M. P. செல்வன்,
426/1, கே. கே. வீதி, யாழ்ப்பாணம்.
[C 5803]

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

அதிர்ஷ்டலாபச் சீட்டு

விற்பனை செய்வதற்கு ஆண் பெண் இருபாலாரும் கீழ்வரும் தொகுதிகளிலுள்ளவர்கள் உடனடியாகத் தேவை

1. யாழ்ப்பாணம்
2. பருத்தித்துறை
3. கோப்பாய்
4. உடுப்பிட்டி
5. நல்லூர்
6. சாவகச்சேரி
7. ஊர்காவற்றுறை
8. தீவுப்பகுதிகள்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
வனிதா சேல்ஸ் டிஸ்ரிபியூட்டேஸ்
இல. 19, யுபிலி பசார், யாழ்ப்பாணம்.
[C 5808]

### ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி.

இந்தியாவில் அனைத்து விடுதலை இயக்க தலைவர்களையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருப்பதையும், அவர்களது ஆயுதங்களையும் கையளிக்காது வைத்திருப்பதையும் கண்டித்து ஈழவர் முன்னணியினால் இம்மாதம் 18 ம் தேதி காலை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடாத்தப்படும். இவ்வூர்வலம் நாச்சிமார் கோயிலடியில் ஆரம்பித்து அடைக்கல மாதா கோயிலில் முடிவடையும்.

இதில் அனைத்து வெகுஜன அமைப்புக்களையும் தொழிற் சங்கங்களையும் கலந்து கொள்ளும்படி ஈழவர்முன்னணியினர் வேண்டு கோள்விடுத்துள்ளன.

---

## பொதுமக்கள் உண்ணாவிரதம்

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனையும் ஏனைய போராளிகளையும் வீட்டுக்காவலிலிருந்து விடுதலை செய்யுமாறு தமிழக அரசையும் மத்திய அரசையும் கோரி இன்று கொக்குவில், மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் பொதுமக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

வண்ணார்பண்ணை வள்ளுவர் சனசமூக நிலையத்தின் முன்றலிலும் இன்று உண்ணாவிரதப்போராட்டம் நடைபெறவுள்ளது. (மா)

---

### கவின் கலையரங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடியான இன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாக இவ்வார நிகழ்ச்சிகள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் வழமைபோல் அடுத்த வாரம் நிகழ்ச்சிகள் இடம் பெறும் என்றும் தமிழர் கலாசார பேரவை அறிவித்துள்ளது.

---

### முல்லைத்தீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசே தாயகம் மீட்கப் புறப்பட்ட எமது தலைவனை ஏன் கைது செய்தாய்!

விடுதலைப் புலிகளை விடுதலை செய்!!

-பெற்றோர்கள்-

இந்திய மக்களே தமிழீழத்தின் தலைவன் பிரபா தங்கள் அரசின் பிடியில் இந்த கறைபடிந்த செயலுக்கு நீங்களும் ஆதரவா?

-விவசாயிகள்-

ஊர்வலத்தில் கோஷம் மக்களை உணர்ச்சிவசப்படுத்துவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (எ)

---

### தீவிரவாத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெங்களூரில் நாளை ஆரம்பமாகவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஹமீத் அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில், தீவிரவாதம் தொடர்பான மூன்று பிரதான அம்சங்கள் குறித்து 'சார்க்' அணியின் ஆய்வுக் குழு ஒன்று சிபார்சுகளைத் தெரிவித்துள்ளது என்றார்.

சார்க் அணியின் நாடுகள் சகலவிதமான தீவிரவாத நடவடிக்கைகளையும், குற்றச் செயலாக கணிக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு அங்கத்துவ நாடும் தனது எல்லைக்குள்ளிருந்து இன்னொரு அங்கத்துவ நாட்டுக் கெதிராக தீவிரவாதிகள் செயல்படுவதை அனுமதிக்கக் கூடாது என்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கை குறித்து ரகசிய தகவல்களை பரிமாறிக் கொள்வதில் ஒற்றுமை இருக்க வேண்டும் என்றும் மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். [ஏ-கே]

## இன்று

யாழ்ப்பாணம் சனி

யாழ் வளாக கவின் கலையரங்கில் இன்று காலை கலை கலாசாரப் பிரிவினரைக்கொண்ட ஆலோசனைக்கூட்டம் நடைபெறவுள்ளது. [மா]

## யுவதியின் சடலம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமான ஒரு யுவதியின் சடலம் உறவினர் எவரும் வராததினால் கடந்த மூன்று தினங்களாக ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரணமான யுவதி இம்மாதம் 12ம் திகதி இரவு 10 மணிக்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின் மரணமானார்.

மானிப்பாய் சுதுமலை தெற்கைச் சேர்ந்த வி. இராசலிங்கம் என்பவர் இந்த யுவதியை ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாக ஆஸ்பத்திரி பொலிசார் தெரிவித்தனர்.

அனுமதித்தவர் அல்லது உறவினர்கள் உடன் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும், இன்று மரண விசாரணை நடைபெறுமென்றும் பொலிசார் மேலும் தெரிவித்தனர். (இ)

---

### லண்டனில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச் செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனராம்.

மேற்படி குண்டு வீச்சுச் சம்பவத்திற்கு, இவர்களுக்கிடையேயான அரசியல் குரோதமே காரணம் என்று லண்டன் பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன.

இதேவேளை இந்த வாலிபர்கள் அனைவரும வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [எ-வே]

---

## பச்சை மட்டை அடி

வல்வெட்டித்துறை, வெள்ளி.

வீண் புரளிகளும், வதந்திகளும் பரப்புவோருக்கு எச்சரிக்கையாக இருக்கும் வகையில் ஒருவருக்கு பச்சைமட்டை அடி வழங்கப்பட்டது.

கடந்த இரவு இச் சம்பவம் வல்வையில் இடம்பெற்றது.

நான்கு தினங்களாக தொண்டமானாறு வீடுகளில் உள்ள ராணுவத்தினரை தமிழீழ விடுதலைப்புலிகள் முற்றுகையிட்டு, வெளியேவர விடாது, பல தாக்குதல்களுக்கு மத்தியிலும் போராடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில பொறுப்புணர்ச்சியற்ற முறையில் நடைபெறாத வதந்திகளைக் கூறிய வல்வையைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே விடுதலைப் புலிகளினால் பச்சை மட்டை அடி வழங்கப்பட்டது.

---

### புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமிலிருந்து இரு கவசவாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் புறப்பட்டு, மூளாய் வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தபோது, தமிழீழவிடுதலைப் புலிகள் உக்கிரமான எதிர்த் தாக்குதல் மேற்கொண்டனர். இதனைத்தொடர்ந்து இராணுவத்தினர் மீண்டும் முகாமுக்குத்திரும்பிச்சென்றனர். (மா)

---

### ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தியை சந்தித்து இனப்பிரச்னை தொடர்பான பல விடயங்களை ஆராய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

17ம் திகதி மாநாடு முடிவடைந்ததும் ஜனாதிபதி ஜெயவர்த்தன மாலை நாடு திரும்புவார். [கி]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 15 11-86

# "இது ஒரு செவிலித்தாய் வரவு செலவுத் திட்டம்"

## கூட்டு இடதுசாரிகள் சாட்டை

கொழும்பு. வெள்ளி 'சர்வதேச நாணய நிதியத்தினதும்' மேற்கத்தைய வல்லரசுகளினதும் கொள்கைகளைச் செவி மடுத்தே இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு செவிலித்தாய் வரவு செலவுத் திட்டம்'

இவ்வாறு கடந்த புதன் கிழமை பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினை விமர்சித்து நேற்று லங்கா சமசமஜ கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி, இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை கூட்டறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளன.

இராணுவ செலவீனத்தில் அதிக பணம் விரயமாகின்றது எனக்குற்றம் சுமத்திய நிதியமைச்சர் ஏற்றுமதி வருவாயை மிகவும் குறைத்துள்ளார் எனவும் அவ்வறிக்கை கூறுகின்றது.

அவ்வறிக்கை மேலும் கூறியுள்ளதாவது:-

இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு அரசியற் தீர்வு காண்பதற்கு தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் தாமதங்கள் இராணுவ செலவீனத்தை அதிகளவு உயர்த்தியுள்ளது என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. ஆனால் இது ஒரு விரைவான அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பதையே புலப்படுத்துகிறது.

'எனினும் கொழுத்த இராணுவ செலவீனங்கள் சுமைகள் இல்லாமலேயே இலங்கையின் பொருளாதாரம் ஏற்கனவே மோசமான நிலையினை அடைந்துள்ளது இவை இலங்கையரசின் சர்வதேச நாணய நிதியினதும் மேற்கத்தேய வல்லரசுகளினதும் கொள்கைகளைக் கடைப்பிடித்து செவி மடுப்பதனாலும் ஏற்பட்டுள்ள ஒரு இழப்பாகும்'.

## நீர்வேலியில் உண்ணாவிரதமும் வீதித்தடையும்

யாழ்ப்பாணம் சனி

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து நேற்று நீர்வேலியில் உண்ணாவிரதமும் வீதித்தடையும் இடம்பெற்றன அமைதியான முறையில் நடைபெற்ற இவ்விரு பாராட்டங்களிலும் மாணவர்களும் பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது (க)

## தீவுப்பகுதியில்

வேலணை வெள்ளி

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடன் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டுமெனக் கோரி தீவுப்பகுதியில் பரவலாக உண்ணாவிரதங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## முற்போக்குக் கலாமன்றத்தின் 'ஈழ மண்ணில் புகைப்படக் கண்காட்சி"

யாழ்ப்பாணம், சனி

முற்போக்குக் கலாமன்றத்தின் ஆதரவில் ஈழமண்ணில் புகைப்படக் கண்காட்சி ஒன்று நேற்றுமாலை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது

ஈழமண்ணின் இன்றைய நிகழ்வுகளையும் கடந்தகால நடவடிக்கைகளையும் சித்தரித்துக்காட்டும் வகையில் அமைந்திருந்த இந்தக் கண்காட்சியை ஈழமண்ணவர் மீட்புப் போரில் வீரமரணமடைந்த 'செண்பகத்தின்' அன்னையார் திருமதி சர்வேஸ்வரி பரமசாமி திறந்து வைத்தார்.

'யாழ் கோட்டையை எப்படிப் பிடிக்கலாம்'' என்ற ஆழ்ந்த சிந்தனையுடன் குந்தியிருக்கும் பச்சிளம் பாலகன், ஈழமண் மீட்புப் போரில் வீர மரணமடைந்த போராளி வீ, ராணுவத்தினரின் பயங்கர 'ஷெல்' தாக்குதல்களுக்குப் பலியான அப்பாவிப் பொது மக்கள் புளொட் இயக்கத்தினரால் அமைக்கப்பட்ட மண்மூடை அரண், அதன் சிறிய துவாரம் ஒன்றின் ஊடாக சாதாரண கமராவால் பிடிக்கப்பட்ட கோட்டையின் வெளித் தோற்றம், பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயை பயங்கர 'ஷெல்'லுக்குப் பலிகொடுத்த 'அம்மாவைக் காணவில்லை...' என்ற மழலைச் செல்வங்கள் இரண்டு, நெடுந்தீவுக் கடலில் கொல்லப்பட்ட ஒன்பது கடற்றொழிலாளர்களின் ஞாபகார்த்தமாக வேலணையில் அமைக்கப்பட்ட நினைவு ஸ்தூபி, மீன்வளம், பனைவளம், நெல்வளம் போன்றனவற்றை சித்தரிக்கும் வர்ணக் கலர்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

'தமயந்தியின்' சாதாரண கமரவுக்குள் சிக்கிய புகைப்படங்கள் அனைத்தையும் பெருந்தொகையான மக்கள் பார்வையிட்டுச் சென்றனர்.

## 'பிரபாவை விடுதலைசெய்' தமிழ் நாட்டில் குரல்

சென்னை அக். 14

'தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே பிரபாகரனை விடுதலைசெய்யுமாறு கோரி தமிழ் நாட்டிலும் குரல் எழுப்பப் பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

'பிரபாவை விடுதலைசெய்' 'தமிழ்நாடு அரசே அபயமளித்து முதுகில் குத்தாதே' போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் தமிழ் நாட்டில் பரவலாக ஒட்டப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது. (எ)

## தனியார் கம்பனியில் ஒன்றரை லட்சம் ரூபா கொள்ளை

திருமலை நிருபர்)

திருமலை நகரிலுள்ள தனியார் கம்பெனி ஒன்றுக்குள் கடந்தவாரம் ஆயுதங்களுடன் புகுந்த இருவர் அங்கிருந்தவர்களை ஆயுதமுனையில் பயமுறுத்தி 1½லட்ச ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்; (சி)

## ஈழ வானொலி

யாழ்ப்பாணம், சனி

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வானொலிச் சேவையான ஈழவானொலி இன்று 15ம் திகதியிலிருந்து மீண்டும் ஒலிக்கவுள்ளது. தினமும் இதன்சேவை காலை 9 மணிக்கும் பி. ப 3 மணிக்கும் நடைபெறும் இதன் அலைவரிசை 7010 K.H.Z 41 மீற்றர் குறுக்கலை 2.

இச் சேவையை திறம்பட மேற்கொள்ள ஈழ மக்கள் குறை நிறைகள் பற்றிய விமர்சனங்களையும் ஆக்கங்களையும் தகவல்களையும் தந்து ஒத்துழைக்குமாறு ஈ. பி. ஆர். எல். எவ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வானொலி, தொலைக்காட்சி, டெக் அனுமதிப் பத்திரம் விநியோகம்

யாழ்ப்பாணம், சனி.

வானொலி, தொலைக்காட்சி, டெக் ஆகியவற்றுக்கான 1987ம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரங்கள் நாளைமறுதினம் 17ம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும் என்றும் இப்பத்திரங்களை குடாநாட்டில் இடங்கும்சகல தபால் நிலையங்களுக்கு முன்னாலும் வேலைநாட்களில் தமது பிரதிநிதிகளிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்படி பிரதேசங்களிலுள்ள எமது ஸ்தாபன அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் நாம் முன்னர் அறிவித்துள்ளவாறு அனுமதிப்பத்திரங்கள் பெறும் முடிவுத் திகதி 3 -12-86 ஆகும் எனவே சகல பாவனையாளர்களையும் இம் முடிவுத்திகதிக்குள் தவறாமல் அனுமதிப் பத்திரங்களைப் பெறுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் ''

## காட்டிக் கொடுத்தவருக்கு மரண தண்டனை

ஒட்டுசுட்டான், வெள்ளி.

முல்லைத்தீவுக்கு அண்மையில் உள்ள கணுக்கேணி என்னும் இடத்தில இருந்த ஈரோஸ்முகாமை காட்டிக்கொடுத்தவர் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஒருவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது

நேற்றுப் பிற்பகல் தண்ணீரூற்றுச் சந்தியில் மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

ஒட்டுசுட்டானுக்கு அண்மையில் உள்ள சாளம்பன் வாசியான ச. உக்கு [வயது 23] என்பவருக்கே மரணதண்டனை வழங்கப்பட்டது.

### தமிழ்ப் போராளிகள் தடுப்புக்காவல்சம்பவம்:

## இந்திய அரசின் வர்க்க குணம்சத்தை வெளிப்படுத்தியுள்ளது

யாழ்ப்பாணம், சனி

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களையும் ஏனைய தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் போராளிகள் சகலரையும் நிபந்தனை எதுவுமின்றி உடனடியாகவிடுதலைசெய்யுமாறு இலங்கை கம்யூனிஸ்கட்சியின் வட பிரதேச கமிட்டி சார்பில் அதன் காரியதரிசி திரு எம் ஏ. சி இக்பால் இந்திய அரசுக்கு இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகராலயம் மூலம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மேற்படி விடயம் சம்பந்தமாக அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தமிழீழவிடுதலை இயக்கத் தலைவர்களை தடுப்புக்காவலில் வைத்த செயலானது இலங்கைத் தமிழ் மக்களையும் அவர்கள் நடத்தும் விடுதலைப் போராட்டத்தையும் அவமதித்த செயலாகும் இத்தகைய நடவடிக்கை இந்திய அரசின் வர்க்க குணம்சத்தை வெளிப்படுத்தியுள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் விடயத்தில் உளசுத்தியுடனும் நேர்மையான எண்ணத்துடனும் செயல்படவில்லையென்பதையும் முழுக்க முழுக்க தமது லாபத்துக்காகவே செயல்படுகிறார்கள் என்பதையும் தெட்டத் தெளிவாக அவர்கள் மேற்கொண்டதைது நடவடிக்கை அவர்களை அம்பலப்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களும் தமிழீழவிடுதலை இயக்கங்களும் இந்திய முதலாளித்துவ அரசிடமும் அதன் அடிவருடியான தமிழ் நாட்டு அரசிடமும் நம்பிக்கை கொள்வதிலிருந்து விடுபட்டு இலங்கைத் தமிழ் மக்களிடமும் சிங்கள முஸ்லிம் முற்போக்காளர்களிடமும் இந்திய சாதாரண ஏழைத் தமிழ் மக்களிடமும் இந்திய பல்தேசிய இன முற்போக்காளர்களிடமும் மற்றும் உலகெங்கிலுமுள்ள புரட்சிவாதிகளிடமும் நம்பிக்கை வைத்துப் போராடுவதன்மூலம்மட்டுமே தமிழ்மக்களின் விடுதலையை வென்றெடுக்க முடியும். எனக் குறிப்பிட்டுள்ளார்

## மரண அறிவித்தல்

### கந்தையா ஐயர்த்துரை

கரவெட்டி வடக்கு வதிரியைச் சேர்ந்தவரும் முன்னைநாள் நெல்லியடிப் பட்டினசபை உபதலைவருமான கந்தையா ஐயர்த்துரை 1986-11-14ந் திகதி அகால மரணமடைந்துள்ளார். இவர் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராசதுரை [U K], தங்கத்துரை [கூட்டுறவு இலங்கா யாழ்ப்பாணம்], அழகதுரை (வாழைச்சேனை கடுதாசி ஆலை), பொன்னுத்துரை (U K), திருமதி யோகாம்பிகை செல்வராசா (புருணை), அருமைத்துரை (U K), ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பகாந்திமலர், வசந்தா, பாமா, யோகராணி, [U K], செல்வராசா (புருணை), ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் [மலேஷியா], கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

(C5809) தகவல் தருபவர்: ஐ. தங்கத்துரை.

### டிசம்பர் 5ம் திகதி

## இந்திய இலங்கை கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் ஆரம்பம்

(கொழும்பு)

இந்திய-இலங்கை கிரிக்கெட் அணிகளிடையிலான மூன்று டெஸ்ட் போட்டிகளையும், ஐந்து சர்வதேச ஒருநாள் போட்டிகளையும் கொண்ட தொடர் அடுத்த மாதம் 7-ம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகிறது

இம்மாதம் 27-ம் திகதி சார்ஜாவில் ஆரம்பமாகும் நான்கு நாடுகளைக் கொண்ட போட்டித் தொடரில் இலங்கை அணி இந்தியாவுடன் 27-ம் திகதியும், பாகிஸ்தானுடன் டிசம்பர் 2-ம் திகதியும், மே. இந்தியாவுடன் டிசம்பர் 3-ம் திகதியும் போட்டியிடும்

இதனையடுத்து டிசம்பர் 5-ம் திகதி இந்தியா செல்லும் இலங்கை அணி அங்கு பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரம் வருமாறு:

டிசம்பர் 7-9 தலைவர் அணியுடன் மூன்றுநாள் ஆட்டம் குவாலியரில், டிசம்பர் 12 14 25 வயதிற்குட்பட்ட அணியுடன் 3 நாள் ஆட்டம் கோகாலபூரில், டிசம்பர் 17-22 முதலாவது டெஸ்ட் கான்பூர், டிசம்பர் 24 முதலாவது ஒருநாள் போட்டி கான்பூர், டிசம்பர் 27 ஜனவரி 1 2-வது டெஸ்ட் நாக்பூர், ஜனவரி 3-8 3-வதும் இறுதியுமான டெஸ்ட் கட்டாக், ஜனவரி 11, 13, 15, 17 2-ம், 3-ம், 4-ம், 5-ம் சர்வதேச ஒருநாள் போட்டிகள் முறையே கல்காத்தி, டெலலி பம்பாய். திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் நடைபெறும். சி]

## அநாதரவான நிலையில்சடலம்

யாழ்ப்பாணம் சனி

கைதடியில பற்றை மறைவுக்குள் அநாதரவான நிலையில் சடலம் ஒன்று கிடக்க நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

சுமார் 45 வயதுள்ள இந்த நபரின் சடலம் கைதடியில் பனம்பொருள் அபிவிருத்திச் சபையால் புதிதாக அமைக்கப்பட்டுவரும் கட்டிட வளவுக்குள் உள்ள பற்றைக்குள் நேற்றுப் பிற்பகல் கண்டுபிடிக்கப்பட்டது: [மா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O, Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126